தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 161 சுபகிருது வருடம், தை மாதம் 19ஆம் திகதி வியாழக்கிழமை (02.02.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ரஜப் - 10, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

உஷ்

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பிரதிநிதியை நேற்று சந்தித்த தமிழ், முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் அந்தச் சந்திப்பின் பின்னர் தமது அரசியல் வியூகங்களை மாற்ற ஆலோசித்து வருகின்றனர்.

2024ஆம் ஆண்டுக்குள் ஜனாதிபதித் தேர்தல் வந்துவிடும் என்று அடித்துக் கூறியிருக்கிறார் அமெரிக்க இராஜதந்திரி. அதனால் அரசியல் தீர்மானங்களை தொலைநோக்கு அடிப்படையில் எடுக்க தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் முடிவெடுத்துள்ளனர்.

அடுத்தடுத்த வாரங்களில் அரசியலில் எதுவேண்டுமானாலும் நடக்கலாம்.

பிரச்சினைத் தீர்வுக்கு அமெரிக்கா ஆதரவு!

தமிழ், முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களிடம் விக்டோரியா எடுத்துரைப்பு

பொறுப்புக்கூறலை கைவிடுமாறும் வலியுறுத்தல்

•நமது அரசியல் செய்தியாளர்

"ஜனாதிபதியின் சர்வகட்சி கலந்துரையாடல் மூலமாக தீர்வு முயற்சியை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். சிறுபான்மையின பிரதிநிதிகள் ஒன்றாக கலந்துரையாடி இனப்பிரச்சினை விவகாரம் உள்ளிட்ட விவகாரங்களில் ஒரு பாதை வரைபடத்தைத் தயாரியுங்கள். பின்னர் ஒவ்வொரு விவகாரமாக முன்வைத்து.... 02 பக்கம்

இறக்குமதியாகும் கைபேசிகள் தொடர்பில் கடுமையான சட்டம்

பதிவுசெய்யப்படாத தொலைபேசிகள் குறித்தும் நடவடிக்கை

•நா.தினுஷா

சட்டரீதியாக இறக்குமதி செய்யப்படும் சகல கைபேசிகள் தொடர்பிலான சட்டதிட்டங்களை கடுமையாக்குமாறும் எதிர்வரும் திங்கட்கிழமை இதுதொடர்பில் அறிக்கை யொன்றை சமர்ப்பிக்குமாறும் சுங்கப் பிரிவுக்கு நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஆலோசனை வழங்கியுள்ளார்.

தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் சர்வதேச கைபேசி உபகரண அடையாள இலக்கம் (IMEI) பதிவுசெய்யப்படாத தொலைபேசிகள் குறித்து நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

மேலும், சட்டவிரோத தொலைபேசி இறக்குமதியை தவிர்ப்பதற்காக கடும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களத்துக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கைபேசி இறக்குமதியாளர்களுடன் நேற்று முன்தினம் (31) நிதி அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது அமைச்சர் இதனைக் குறிப்பிட்டிருக்கிறார்.

இதுதொடர்பில் இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில், 02 பக்கம்

சுதந்திர தின நிகழ்வைப் புறக்கணிக்க கத்தோலிக்க சபை தீர்மானம்

ஆட்சியாளர்கள் மன்னிப்புக் கோர வேண்டுமெனவும் தெரிவிப்பு

•நா.தினுஷா

நாட்டில் 75ஆவது சுதந்திர தினத்தன்று ஆட்சியாளர்கள் தாம் செய்த தவறுகளை ஏற்று மக்களிடம் மன்னிப்புக் கோரியிருக்க வேண்டும். நாட்டில் தற்போதுள்ள நிலைமையில் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்கும் அதற்காக மக்களின் பணத்தை ஒதுக்கீடுசெய்வதற்கும் நாங்கள் கடுமையான எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம். 02 பக்கம்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நீக்குமாறு கோரிக்கை

அமெரிக்காவும் பிரிட்டனும் ஜெனீவாவில் வலியுறுத்து

•நமது விடேட செய்தியாளர்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நீக்குமாறு இலங்கையை வலியுறுத்தியுள்ள அமெரிக்காவும் பிரிட்டனும், ஒரு பாரிய நடத்தையை குற்றமற்றதாக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் உலகளாவிய கால மீளாய்வு செயற்குழுவில் நேற்று (01) ஆரம்பமான கூட்டத்தில் இந்தக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த மீளாய்வுக் கூட்டம் ஜெனீவாவில் மனித உரிமைகள் பேரவையில் அந்நாட்டு நேரப்படி காலை 09 மணி முதல் பிற்பகல்... 02 பக்கம்

தேர்தல் வர்த்தமானி நேற்று வெளியானது

ஆணைக்குழுவிலிருந்து விலகுவதாக அறிவித்த சார்ள்ஸும் கையெழுத்திட்டார்

நாட்டில் 340 உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தேர்தலை எதிர்வரும் மார்ச் மாதம் 09ஆம் திகதி நடத்துவதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிக்கை 25 மாவட்டங்களினதும் தெரிவத்தாட்சி அதிகாரிகளால் வெளியிடப்பட்டுள்ளது. அந்த வர்த்தமானி அறிக்கையில் 25 மாவட்டங்களுக்குமான உள்ளூராட்சி மன்றத் தேர்தல் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் எதிர்வரும்... 02 பக்கம்

கடும் மழைக்கு வாய்ப்பு 12 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை



வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்க நிலைமை காரணமாக நாட்டின் 12 மாவட்டங்களில் கடும் மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அந்தவகையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், அநுராதபுரம், புத்தளம், குருநாகல், பொலன்னறுவை, மட்டக்களப்பு, திருகோணமலை,... 02 பக்கம்

நாளாந்தம் 46 பேர் புற்றுநோயால் உயிரிழப்பு

இலங்கையில் நாளாந்தம் கண்டறியப்படும் 105 புற்றுநோயாளிகளில் 46 பேர் அந்நோயால் இறக்கின்றனர் - என தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் இஷானி பொன்னன்டோ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 4ஆம் திகதி உலக புற்றுநோய் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில், சுகதாரமேம்பாட்டுப் பணியகத்தில் முன்னெடுக்கப்பட்ட ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

2020ஆம் ஆண்டில் மொத்தம் 38ஆயிரத்து 229 புதிய புற்றுநோயாளர்கள் கண்டறியப்பட்டனர் மற்றும் அவர்களில் 16,691 பேர் இறந்துள்ளனர்.

பெண்களுக்கு புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாகவும், அதேசமயம் ஆண்களின் இறப்பு விகிதம் அதிகமாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

2020ஆம் ஆண்டில் மொத்தம் 20,395 பெண்களும் 17,834 ஆண்களும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். 02 பக்கம்

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான உப செயலாளர் விக்டோரியா நுலண்ட், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று (01) சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும் நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் உதவி நல்குமென ஜனாதிபதியிடம் நுலண்ட் உறுதியளித்துள்ளார்.

13ஐ அமுல்படுத்த இடமளிக்க மாட்டோம்

சரத் வீரசேகர சூளுரை

•நா.தினுஷா

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் என்பது ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கும் அவசியமானதல்ல. 02 பக்கம்

கமெண்ட் கந்தர்...

இலங்கையில தெகிய ஜனாதிபதித் தேர்தல் நடக்குமெண்டு அமெரிக்காவிலிருந்து வந்த அம்மா சொல்லுற அளவுக்கு நிலைமை இருக்குது... அந்தளவு நாங்கள் அமெரிக்காவோட உறவா இருக்கிறம்..

மின்வெட்டுக்கு எதிராக உயர் நீதிமன்றில் மனு

02 பக்கம்

அரசின் அடக்குமுறை நிறுத்தப்பட வேண்டும்

ஐ.நா. அறிக்கையாளர் வோல் தெரிவிப்பு

இலங்கையில் நடைபெறும் அமைதியான போராட்டங்களுக்கு எதிரான அரசாங்கத்தின் அடக்குமுறை நிறுத்தப்பட வேண்டும் - என்று ஐக்கிய நாடுகள் சபைக்கான விசேட அறிக்கையாளர் கிளமெண்ட் வோல் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் தொடர்பான மீளாய்வு கூட்டத்தொடருக்கு முன்னர், எதிர்ப்பாளர்களையும்.. 02 பக்கம்

தேர்தல் முறைப்பாடுகளுக்காக பெவ்ரல் அமைப்பில் விசேட பிரிவு

•கே. சுபானி

PAFFREL

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை முன்னிட்டு, தேர்தல் விதிமீறல்கள் குறித்து முறைப்பாடுகளை மேற்கொள்வதற்காக பெவ்ரல் அமைப்பு விசேட பிரிவொன்றை நிறுவியுள்ளது.

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலின் ஊடாக மக்களின் வாக்குரிமையை பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாகவும், தேர்தல் சட்ட விதிமீறல்கள் குறித்து உள்ளிப்பாக அவதானித்து வருவதாகவும் தெரிவித்துள்ள பெவ்ரல் அமைப்பு இதுகுறித்து அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளது. 02 பக்கம்

எண்ணாயிரம் பேருக்கு ஊதியம் வழங்க முடியுமா?

தேர்தலை நடத்துவது பொருளாதார வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் என்கிறது ஐ.தே.க.

•கே. சுபானி

"மக்களின் நம்பிக்கை மீண்டும் அதிகரித்துக்கொண்டிருக்கும்வேளை, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் எண்ணாயிரம் பேருக்கு ஊதியத்தை வழங்குவதற்கு எதிர்க்கட்சிகள் எதிர்பார்க்குமானால், நாட்டின் பொருளாதாரம் மீண்டும் அதலபாதாளத்தில் வீழ்வதுடன், கற்றுலாத்துறை பாதிக்கப்படும்" - என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார். 02 பக்கம்

ஒரு இலட்சம் சுற்றுலாப் பயணிகள் ஜனவரியில் நாட்டுக்கு வருகை

நாட்டுக்கு ஜனவரியில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகைத் தந்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜனவரி 31ஆம் திகதி வரையிலான சுற்றுலாப் பயணிகளின் வருகை குறித்த அறிக்கையொன்று வெளியிட்டுள்ள அமைச்சர், சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிக்கும் செயற்பாடுகளினூடாக சுற்றுலாத்துறையில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன்படி கடந்த 2022 ஜனவரி மாதம் 82 ஆயிரத்து 327 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்திருந்த நிலையில், 2023ஆம் ஆண்டு ஜனவரியில் ஒரு இலட்சத்து இரண்டாயிரத்து 545 சுற்றுலாப் பயணிகள் (102,545) வருகை தந்துள்ளனர்.

2022ஆம் ஆண்டு மொத்தமாக 7 இலட்சத்து 19ஆயிரத்து 978 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருந்தனர். அதன்படி கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 96ஆயிரத்து 507 சுற்றுலாப் பயணிகளும், மாா்ச் மாதம் ஒரு இலட்சத்து 6ஆயிரத்து 500 பேரும், ஏப்ரல் மாதம் 62ஆயிரத்து 980 பேரும், மே மாதம் 30ஆயிரத்து 207பேரும், ஜூன் மாதம் 32ஆயிரத்து 856பேரும், ஜூலை மாதம் 37ஆயிரத்து 760 பேரும், ஓகஸ்ட் மாதம் 37ஆயிரத்து 760 பேரும், செப்டெம்பர் 29ஆயிரத்து 802பேரும், ஒக்டோபரில் 42ஆயிரத்து 26பேரும், நவம்பரில் 59ஆயிரத்து 759பேரும், டிசம்பரில் 91ஆயிரத்து 961 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

மின்வெட்டுக்கு எதிராக...

பரீட்சை காலத்தில் மின்வெட்டு அமுல்படுத்தப் படுவதை தடுக்கக்கோரி, இலங்கை ஆசிரியர் சங்கம் உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள் ளது. அச்சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

மின்வெட்டு தடை உத்தரவை இலங்கை மின்சார சபைக்கு பிறப்பிக்குமாறு இந்த மனுவில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. மின்சக்தி, எரிசக்தி அமைச்சின் செயலாளர், இலங்கை மின்சார சபை, பெற்றோலிய சூட்டுத்தாபனம் ஆகியவற்றின் தலைவர்கள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகிய தரப்பினர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

நாளாந்தம் 46 பேர்...

புற்றுநோயால் கண்டறியப்பட்ட நோயாளிகளில் 50 சதவீதம் பேர் இறக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புற்றுநோயாளிகளுக்கான மருந்து தட்டுப்பாடு தொடர்பில் வினவியபோது, மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும், உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஊடாக மருந்துகளை கொள்வனவு செய்யும் பொறிமுறையொன்று நடைமுறையில் உள்ளதாகவும், அந்த செயல்முறையும் கமாா் ஆறு மாதங்களாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை...

12.30 மணி வரை அறை இலக்கம் 20இல் இடம்பெற்றது. இலங்கை தொடர்பில் இதற்கு முன்னர் மூன்று தடவைகள் மதிப்பாய்வுக் கூட்டங்கள் இடம்பெற்றுள்ளன. 2008, 2012 மற்றும் 2017ஆகிய வருடங்களில் மதிப்பாய்வுகள் இடம்பெற்றுள்ள நிலையில், இவ்வருடமும் கூட்டத்தொடர் இடம்பெற்றது.

இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் 23 பக்கங்களைக் கொண்ட அறிக்கை இதன்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கம் கடந்த காலங்களில் மனித உரிமைகள் தொடர்பில் உறுதியளித்த விடயங்கள் தொடர்பில் அதில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

சட்டம் மற்றும் பொறிமுறைசார்ந்த திட்டம், யுத்தகாலத்தில் காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், சர்வதேச பொறிமுறைகளான ஆதரவு, அரசியல் தீர்மானங்கள், சிவில் மற்றும் அரசியல் உரிமை, பொருளாதார, சமூக கலாசார உரிமைகள் மேம்படுத்தல், ஐ.நா.வின் ஆதரவு, ஒத்துழைப்பு, சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றம் ஆகிய முக்கிய தலைப்புகளின் கீழ் விபரங்கள் குறித்த அறிக்கையில் வெளியிடப்பட்டன.

இந்தக் கூட்டத்தொடரின்போது அமெரிக்காவும் பிரிட்டனும் பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளன. இதேவேளை, இலங்கையில் 13ஆவது திருத்தம் அமுல்படுத்தப்பட வேண்டுமென இந்தியா தெரிவித்துள்ளது.

அரசின் அடக்குமுறை...

ஆர்ப்பாட்டக்காரர்களையும் பாதுகாக்க வேண்டிய கடமை அதிகாரிகளுக்கு இருக்கிறது என்பதை இலங்கை அரசாங்கத்துக்கு வலியுறுத்வதாகவும் அவர் அறிவித்திருக்கிறார்.

மனித உரிமைகளுக்கான சர்வதேச கூட்டமைப்பு நாட்டின் மோசமான அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், 2022இன் முற்பகுதியில் இலங்கையில் இடம்பெற்ற போராட்டங்கள் தொடர்பில் "ஒரு ஒடுக்குமுறையின் உற்றுகூரியல் - இலங்கையின் அறகலய எதிர்ப்பு இயக்கத்தின் அடக்குமுறை" என்ற தலைப்பில் அறிக்கையொன்ற வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற காலப்பகுதியில் கடுமையான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எதிர்ப்பாளர்களை தடுப்பதற்கு இராணுவம் மற்றும் அவசரகால அதிகாரங்களைப் பயன்படுத்த போவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவித்துள்ளமையானது எச்சரிக்கை நிலையை எடுத்துக்காட்டுவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் சர்வதேச சமூகம் தொடர்பில் விழிப்புடன் இருப்பது மற்றும் போராட்டக்காரர்களின் உரிமைகளை மதித்தல், பாதுகாத்தல் என்பன தொடர்பில் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டியது அவசியம் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த அறிக்கை தொடர்பில், ஐக்கிய நாடுகள் சபைக்கான விசேட அறிக்கையாளர் கிளமென்ட் வோல் தனது டுவிட்டர் கணக்கில் பதிவொன்றை வெளியிட்டே மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

தேர்தல் வர்த்தமானி...

மாா்ச் மாதம் 09ஆம் திகதி காலை 07 மணிமுதல் மாலை 04 மணிவரை இடம்பெறும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய யுத்தனம், குருநாகல், திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, வவுனியா, மன்னாா், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், ஹம்பாந்தோட்டை, மாத்தறை, காலி, நுவரெலியா, மாத்தளை, கண்டி, களுத்துறை, கம்பஹா, கொழும்பு உள்ளிட்ட 25 மவாட்டங்களுக்கும் தெரிவத்தாட்சி அதிகாரிகளினால் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டிருக்கிறது.

இதேவேளை, அதிகாலை வர்த்தமானியை வெளியிடுவதற்கான பத்திரத்தில் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினா் பி.எஸ்.எம். சாா்ஸ் கையெழுத்திட்டுள்ளாா். அவா் பதவி விலகுவதாக அறிவித்திருந்த நிலையில் அவருடைய கையெழுத்தும் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடும் மழைக்கு வாய்ப்பு....

அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்டங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மேலும், இந்த மாவட்டங்கள் உப்பட கண்டி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் கடுமையான காற்று வீசக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மலைப்பாங்கான மற்றும் தாழ்நிலப் பகுதிகளில் வசிப்போர் அவதானமாக இருக்குமாறு அந்தத் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

எண்ணாயிரம் பேருக்கு...

ஹிஜிதுல மற்றும் எல்பிட்டிய தேர்தல் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் நிா்வாகக்குழு கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பாராளுமன்ற உறுப்பினா் வழிர அபேவா்தன மேற்கண்டவாறு தெரிவித்தாா்.

அதுமட்டுமன்றி வாகனங்களுக்கான சுத்தமக மற்றும் வங்கிக் கடன்களை மீளச் செலுத்த முடியாதவா்கள் இக்கட்டான சூழலை எதிா்நோக்க நேரிடும் எனத் தெரிவித்த வழிர அபேவா்தன, எதிா்க்கட்சிகள் இவை எதனையும் கருத்திற் கொள்ளாது தோ்தலை மட்டும் கோருமானால் மக்கள் அதுகுறித்து உன்னிப்காக கவனம் செலுத்தவேண்டும் எனவும் கட்டிக்காட்டியுள்ளாா்.

மேலும், தோ்தலுக்காக மட்டும் 20 பில்லியன் ரூபா செலவிடப்படவுள்ள நிலையில், ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தெரிவு செய்யப்பட்டுள்ள 8 ஆயிரம் உறுப்பினா்களின் மாதாந்த கொடுப்பனவுகள் மற்றும் ஊதியம் வழங்கக்கூடிய சாத்தியமில்லை என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளாா்.

இறக்குமதியாகும் கைபேசிகள்...

சட்டவிரோதமாக முன்னெடுக்கப்படும் கையடக்க தொலைபேசி இறக்குமதியை இரத்துச் செய்வதற்காக விரைவான நடவடிக்கை எடுக்கப் படும். இதுபோன்ற சட்டவிரோத இறக்குமதிகளின் காரணமாக நாட்டுக்கு கிடைக்கும் பாரியளவான வரி வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது.

சட்ட ரீதியாக இறக்குமதி செய்யப்படும் சகல கைபேசிகளினதும் சர்வதேச கைபேசி உபகரண அடையாள இலக்கம் (IMEI), தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்படும் என்பதுடன் கைபேசிகள் காணாமல்போகும் சந்தர்ப்பம் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளில் இடம்பெறும் சந்தர்ப்பத்தில் இந்த இலக்கத்தை கொண்டே குறித்த கைபேசி அடையாளம் காணப் படுகின்றது.

இருந்தபோதும் சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்படும் தொலைபேசிகள் அவ்வாறு பதிவு செய்யப்படுவதில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும், சட்டரீதியாக இறக்குமதி செய்யப்படும் சகல கைபேசிகளினதும் பாதுகாப்புத் தன்மை உறுதிப் படுத்தப்பட்டாலும் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்படும் கைபேசிகளினது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் முறைப்பாடுகளுக்காக...

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது,

வாக்குகளை பெற்றுக்கொள்வதுதாக இலஞ்சம் வழங்குதல், பொருட்களை விநியோகித்தல் மற்றும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக உள்ளூராட்சி மன்றங்களுக்கு உரித்தான சொத்துக்களை பயன்படுத்துதல், புதிய நியமனங்களை வழங்குதல், இடமாற்றங்ள், பதவியுயர்வுகளை வழங்குதல் உள்ளிட்ட தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் கண்காணித்து வருகிறது.

இவ்வாறான தேர்தல் சட்ட விதி மீறல்கள் இடம்பெறுமானால் அதுகுறித்து பொதுமக்கள் பெப்ரல் தலைமை அலுவலகத்தில் அமைக்கப்பட் டுள்ள இந்த சிறப்பு பிரிவுக்கு முறைப்பாடளிக்க முடியும்.

அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் குழுவை உள்ளடக்கிய இந்த விசேட பிரிவுக்கு தேர்தல் சட்ட மீறல்கள் குறித்து முறைப்பாடளிப்பதன் மூலம் அவற்றுக்கான துரித தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியும்.

இதேவேளை, தேர்தலில் போட்டியிடும் பெண் வேட்பாளர்கள், தேர்தலில் போட்டியிடும் போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் முறைப்பாடளிப்பதற்காக விசேட தெலைபேசி இலக்கங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

075 8989120 என்ற என்னை தொடர்புகொள் வதன் மூலம் பெண் வேட்பாளர்கள் தங்களின் முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

அத்தோடு, 011 2558570 / 011 2558571 என்ற என்னைத் தொடர்பு கொள்வதன் மூலம் உங்கள் முறைப்பாடுகளை மேற்கொள்ளலாம்.

மேலும், 011 2558572 / 011 2558579 என்ற தொலைநகல் இலக்கங்களுக்கு முறைப்பாடுகளை அனுப்பி வைக்கலாம்.

அத்தோடு, 075 8989104 என்ற வட்ஸ்அப் என்னுக்கு தமிழ் மொழியில் உங்கள் முறைப்பாடுகளையும், சிங்களமொழியில் உங்கள் முறைப்பாடுகளை மேற்கொள்ளவேண்டுமாயின் 075 3505245 என்ற வட்ஸ்அப் என்னுக்கும் அனுப்பி வைக்கலாம்.

மின்னஞ்சலினூடாக தமிழில் முறைப்படளிக்க tlgelection2023gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் சிங்களமொழியில் முறைபடளிக்க slgelection2023gmail.com என்ற முகவரிக்கும் அனுப்பி வைக்கலாம்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

13ஐ அமுல்படுத்த...

ஒருசில பிரிவினைவாதம் கொண்ட தமிழ், சிங்கள அரசியல்வாதிகளுக்கே இந்த 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் அவசியமாக காணப்படுகிறது. அதனை நடைமுறைப்படுத்துவதற்கு இடமளிக்கப் போவதில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் ரியர் எட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

மேலும், மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் புதிய அரசியலமைப்பொன்றை தயாரித்து அதனை நடைமுறைப்படுத்த தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடமைப்பட்டுள்ளதாகவும், மாறாக அரசியலமைப்பிலுள்ள திருத்தங்களை பலப்படுத்தவேண்டிய அவசியம் அவருக்கு இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சரத் வீரசேகர, கிழக்கு மகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் உள்ளிட்ட தேசிய அமைப்புகளின் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் சிலர் நேற்று முன்தினம் மகா சங்கத்தினரை சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

அந்தக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியிரு ப்பது அனைவரும் அறிந்த விடயமாகும். இவ்வாறான நெருக்கடி நிலைமையின் மத்தி யில் 13ஆவது அரசியலமைப்பு திருத் தத்துக்கு முக்கியத்துவமளிக்க வேண்டிய அவசியமில்லை. 13ஆவது திருத்தச் சட்டம் என்பது இந்தியாவினால் எம்மீது பலவந்தமாக திணிக்கப்பட்டவொன்றாகும். இந்தச் சட்டம் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதல்ல. 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினால் ஐக்கியமாக இருந்த எமது நாடு ஒன்பது பிரிவுகளாக துண்டாடப்பட்டது. ஜே.ஆர். ஜெயவர்தன கூட இந்த திருத்தத்துக்கு அரசியலமைப்பினூடாக ஒருசில நிர்வாகத் தடைகளை விதித்திருந்தார். காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் உள்ளிட்ட சகல அதிகாரங்களும் வழங்கப்பட்டிருந்தன. தற்போது அவ்வாறானவொரு நிலையில்லை.

13ஆவது அரசியலமைப்புக் திருத்தத்தை அமுல்படுத்தினால் நாட்டில் இருக்கும் ஐக்கியம் முழுமையாக இல்லாமல் போய்விடும். இவ்வளவு காலமும் பேணப்பட்டு வந்த ஐக்கிய நாடு, முழுமையாக பிளவு நாடாக மாறும். எமது நாட்டில் ஐக்கியத்தை பாதுகாப்பதற்காக அந்நியர்களின் ஆட்சிகாலம் முதல் எமது நாட்டு மக்கள் பல்வேறு அர்ப்பணிப்புகளையும் தியாகங்களையும் செய்திருக்கிறார்கள். இவ்வாறு கட்டிக்கா்க்கப்பட்டு வந்த நாட்டில் ஐக்கியம் 13ஆவது திருத்தத்தினூடாக நாட்டை பிளவு மயப்படுத்துவதா? என்பதே தற்போதைய பிரச்சினையாகும்.

தமிழ் அமைப்புகளுக்கு ஒருகாலமும் 35 வீதத்துக்கும் அதிகளவு மக்கள் ஆதரவு கிடைத்ததில்லை. அவ்வாறெனில், ஒட்டுமொத்த தமிழ் மக்களும் இதனை விரும்பவில்லை. மொத்த தமிழ் மக்களின் எனத்தொகையில் நூற்றுக்கு 50 சதவீதமான தமிழ் மக்கள் கொழும்பிலேயே இருக்கிறார்கள். எனவே, இது தமிழ் மக்களுக்கு அவசியமானதொன்றும் இல்லை.

பிரிவினைவாதம் கொண்ட தமிழ் மற்றும் சிங்கள அரசியல்வாதிகளுக்கே இந்த திருத்தம் அவசியமாக இருக்கிறது. எனவே, அதற்கு ஒருகாலமும் இடமளிக்கப் போவதில்லை.

மாகாணங்களைப் பிரிப்பது என்பது தவறானதாகும். அவ்வாறு இடம்பெற்றால் வடக்கில் இருக்கும் பௌத்த விகாரைகளுக்கு என்னவாகும் என்பது கேள்விக்குரியாகும். அதற்கு சிறந்த உதாரணம் குருந்தூர் மலை விவகாரமாகும். பௌத்த கலாசாரம் இல்லாமல் போய்விடும்.

ஐக்கியத்தை பாதுகாப்பதற்காகவே மக்கள் இந்த அரசாங்கத்தை நியமித்தார்கள். புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவதற்காகவே மக்கள் வாக்களித்தார்கள். இதுபோன்று அரசியலமைப்பிலுள்ள திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரம் வழங்கவில்லை. ஆகவே, புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்கி அதனை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்பாடுகளையே தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் முன்னெடுக்க வேண்டும்.

இந்தியா எமக்கு உதவிகளை வழங்குகிறது என்பது உண்மை. அவர்களை நாங்கள் மதிக்கிறோம். ஆனால், எமது உள்ளக விவகாரங்களில் தலையிடும் அதிகாரம் அவர்களுக்கு இல்லை என்றார்.

சுதந்திர தின நிகழ்வைப்...

எனவே, கத்தோலிக்க சபையை பிரதிநிதித்து வப்படுத்தும் எவரும் சுதந்திரத் தினத்தில் கலந்துகொள்ளப் போவதில்லை. சுதந்திர தினத்தை முழுமையாக நிராகரிப்பதாக கத்தோலிக் கச் சபை அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று (01) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போது, கத்தோலிக்கச் சபையின் ஊடகப் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ தெரிவித்தார்.

மேலும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் மக்களிடம் மன்னிப்புக் கோருவதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உரிமை இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

75ஆவது சுதந்திர தினத்தை ஒரு தேசமாக நாம் கொண்டாடிய ஆக வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். இருந்தபோதும், அவ்வாறு சுதந்திர தினத்தை கொண்டாடுவதற்கான நிலைமை இருக்கிறதா, என்பதே பிரச்சினையாகும். எமது மக்களின் நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் தொடர்பில் பெருமையுடன் பேசிக்கொள்ளக் கூடிய விடயம் மிகுதியாகியுள்ளதா? என்ற பிரச்சினை அனைவரிலும் மத்தியில் இருக்கிறது.

வெளிநாடுகளிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன்களை மீளச் செலுத்த முடியாமல் எமது நாடு பொருளாதார ரீதியாக வங்குரோரத்து நிலையை அடைந்துள்ளது. வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்திருக்கின்றன. மொத்த சனத்தொகையில் 30 சதவீதமானவர்கள் உணவின்றி இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் உணவு வேலைத்திட்டம் அறிவித்திருக்கிறது. 85 சதவீதமான குடும்பங்கள் ஆரோக்கியமற்ற குறைந்த விலையை கொண்ட உணவுப் பொருட்களையே கொள்வனவு செய்வதாக அந்த வேலைத்திட்டம் மேலும் சுட்டிக்காட்டியிருக்கிறது.

மக்களின் வருமானம் வீழ்ச்சியை சந்தித்துள் ளதே தவிர எந்தவொரு வகையிலும் முன்னேற்றத்தை சந்திக்கவில்லை. இந்த நிலையிமையிலும் அரசாங்கம் மக்களிடம் தொடர்ந்து நேரடி மற்றும் மறைமுகமாக வரி அறவிட்டு வருகிறது. இதனால் அனைத்து தொழிற்துறைகளும் வீழ்ச்சியை சந்தித்து வருகின்றது.

எமது நாட்டின் சட்ட ஒழுங்கு பாரதூரமாக அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது. அனைவருக்கும் சாதாரண சட்டத்தை நிலைநாட்டுவதற்கு, பொது மக்களையும் பாதுகாப்பதற்கு கடமைப்பட்டுள்ள செயற்துறை இன்று அரசியல் மயமாகியுள்ளமை வெட்கப்படக்கூடிய விடயமாகும். அரசியல் வாதிகளின் எதிர்பார்ப்புக்களை நிவர்த்தி செய்வதற்காக பொலிஸார், ஒருசில பிரச்சினைகளுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் அமைதியான போராட்டங்களை அடக்கி, சட்டத்தை முறைகேடாக பயன்படுத்தி மக்களின் உரிமைகளை மீறி செயற்பட்டு வருகின்றது. இதனூடாக மக்களை தொடர்ந்தும் நெருக்கடிக்குள்ளாக்கி வருகிறார்கள்.

சட்டமா அதிபர் தினைக்களம் போன்ற சுயாதீன நிறுவனங்கள் மக்களுக்காக சுயதீனமாக செயற்படுவதற்கு பதிலாக அரசியல்வாதிகளின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் நோக்கில் செயற்பட்டு வருகின்றமை தெளிவாக தெரிகிறது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி விசாரணைக் குழு சட்டமா அதிபருக்கு பெற்றுக்கொடுத்திருக்கும் பரந்துரைகளை நிறைவேற்றாமல் அவற்றை தொடர்ந்து நிராகரித்து வருகின்றமை அதற்கு சிறந்த உதாரணமாகும். குற்றச்செயல்களும், போதைப்பொருள் பாவனையும் எமது நாட்டை ஆக்கிரமித்துள்ளது. நாட்டுக்கு போதைப்பொருள் கொண்டுவரும் பிரதான வியாபாரிகளை பாதுகாத்து வருகிறார்கள். பொருளாதார ரீதியாக

பிரச்சினைத் தீர்வுக்கு...

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் விவகாரத்தை ஆதரிக்காதுமாம். 13ஆவது திருத்தம் தமது நிலைப்பாடல்ல, சமஷ்டி அடிப்படையிளான தீர்வே, தமது இலக்கென தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

13ஆவது திருத்தம் மற்றும் அரசியலமைப்பு திருத்தங்களை ஆதரிப்பதாக மளேர கனேரனும் குறிப்பிட்டார். தற்போது ஜனாதிபதி அரசியல் பலமில்லாதவரை போல தென்பட்டாலும், அவருடாக படிப்படியாக பல விடயங்களை நிறைவேற்ற முடியுமென விக்டோரியா நுலண்ட் தெரிவித்தார்.

சிறுபான்மையினக் கட்சிகள் ஒன்றாக கலந்துரையாடி, எந்தெந்த விவகாரங்களை பெறுவது என்பது தொடர்பில் வழி வரைபட மொன்றை தயாரித்து, ஒவ்வொரு விவகாரமாக எடுத்து, அவற்றை பெற்றுக்கொள்ள வேண்டுமென விக்டோரியா ஆலோசனை வழங்கினார். அவற்றை பெற்றுக்கொள்ள அமெரிக்காவும் துணை நிற்கும் என்றார்.

ரணில் விக்ரமசிங்க விரைவில் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வார் என்பதையும் விக்டோரியா நுலண்ட் சூசகமாக வெளிப்படுத்தினார். அனேகமாக அது அடுத்த வருடமாக இருக்கலாமென்றும், புதிய அரசியலமைப்பு விவகாரம் தடைபெறும் என்றும், அது ஜனாதிபதித் தேர்தலின் முன்னாரா அல்லது பின்னாரா என்பது தனக்கு தெரியவில்லையென்றும் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி நிச்சயமாக இலங்கைக்கு கிடைக்கும், விரைவில் கிடைக்கும் என்றும் அவர் இந்த சந்திப்பில் நம்பிக்கை வெளியிட்டார். சர்வதேச நாணய நிதியத்தின் உதவியின் மூலம், இலங்கை தொடர்பான நம்பிக்கை உருவாகி, மேலும் பல நாடுகள் இலங்கைக்கு உதவி மற்றும் முதலீடு செய்யும் என்றார். அமெரிக்காவும் மேலும் உதவும் என நம்புவதாக அவர் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கலேஜேந்திரமாா் பொன்னம்பலம், பொறுப்புக்கூறல் பொறிமுறையை கைவிடமுடியாதென்றும், அமெரிக்கா அதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென்றும் இந்த சந்திப்பில் தெரிவித்தாா்.

"தற்போதைய சூழலில் பொறுப்புக்கூறலை கையிலெடுப்பது, தமிழா் பிரச்சினையை தீா்க்க ஒரு உபாயமாகவும் அமையும். பொறுப்புக்கூறல் விவகாரம் மஹிந்த ராஜபக்ஷ தரப்பிற்கு அழுத்தமாக அமையும். அவா்கள் அதிலிருந்து தப்பிக்க, ரணில் விக்ரமசிங்கவின் தீா்வு முயற்சிக்கு ஆதரிதது, மற்றைய சிக்கல்களை தீா்க்க முயற்சிப்பாா்கள்" என கலேஜேந்திரகுமாா் குறிப்பிட்டாா்.

எனினும், விக்டோரியா நுலண்ட் இந்த கோரிக்கையை நாசூக்காக தவிா்த்து விட்டாா். பொறுப்புக்கூறலை வலியுறுத்துவது தேவையான, நல்ல விடயம். ஆனாால் பொறுப்புக்கூறலை வலியுறுத்த இது உகந்த தருணமல்ல. இப்போது பொறுப்புக்கூறலை வலியுறுத்த ஆரம்பித்தாால் ஏனைய விடயங்கள் சிக்கலாகி விடலாம். அதனால் பொறுப்புக்கூறல் விவகாரத்தை பின்னா் பாா்த்துக் கொள்ளலாம் என்ற சாரப்பட குறிப்பிட்டாா்.

ரணில் விக்ரமசிங்கவின் அரசை நம்புங்கள், அதை ஆதரியுங்கள் என்பதே அமெரிக்க விக்டோரியா நுலண்டின் நேற்றைய சந்திப்பின் மறைமுக செய்தியென, சந்திப்பில் கலந்து கொண்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

மன்னாரில் கட்டுமானப் பணியின்போது உடைந்து விழுந்த காற்றாலை கோபுரம்

காயங்களுடன் ஒருவர் உயிர் தப்பினார்

மன்னார் மாவட்டத்தில் மிக வேகமாக அமைக்கப்பட்டுவந்த காற்றாலை மின்சாரக் கோபுரம் ஒன்று கட்டுமானப் பணியின்போது உடைந்து விழுந்துள்ளது.

மன்னார், நானாட்டான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட நறுவிலிக்குளம் கடற்கரையோரங்களில் அமைக்கப்பட்டுவந்த கோபுரங்களில் ஒன்று கடந்த மாதம் உடைந்து விழுந்துள்ளது.

அப்பகுதி கால்நடைகள் விவசாயிகள் மாத்திரம் சென்றுவரும் பகுதி என்பதால் சம்பவம் வெளியில் தெரியாமல் இருந்துள்ளது.

எனினும், அப்பகுதியில் செய்கைபண்ணப்பட்டிருக்கும் விவசாய நடவடிக்கைகளை பார்வையிடச் சென்றபோது கோபுரம் சரிந்து கிடப்பதையும் கனரக பளு தூக்கும் கிரேன் வாகனம் தேதமாகியிருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

குறித்த கோபுரம் சரிந்து கிரேன் மீது விழுந்த போதும் கிரேன் இயக்குனர் காயங்களுடன் உயிர் தப்பியுள்ளதாக அறிய முடிகிறது.

இந்தச் சம்பவம் நடைபெற்றதிலிருந்து அப்பகுதியில் காற்றாலை கோபுரங்கள் அமைக்கும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், இம்மாத இறுதியில் மீண்டும் காற்றாலை மின்கோபுரங்கள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

நானாட்டான் பிரதேசத்தில் நறுவிலிக்குளம் முதல் அச்சங்குளம் வரை 6 மின் கோபுரங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் எதிர்ப்புப் பேரணியை கலைக்க நீர்த்தாரைப் பிரயோகம்

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றி யத்தின் எதிர்ப்புப் பேரணியை கலைப்பதற்கு பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம் மேற் கொண்டுள்ளனர்.

களனி பல்கலைக்கழகத்திற்கு அருகிலிருந்து இந்த எதிர்ப்புப் பேரணி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றி யத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே தடுத்து வைக்கப்பட்டிருந்தமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், இந்த எதிர்ப்புப் பேரணி முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, 167 நாட்களாக தடுத்துவைக்கப்பட்டிருந்த அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே நேற்று முன்தினம் (31) விடுதலையானார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான குற்றச் சாட்டுகளிலிருந்து வசந்த முதலிகே நேற்று (31) விடுவிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில், கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்ட மூன்று வழக்குகளில் அவருக்கு நேற்று (01) பிணை வழங்கப் பட்டிருந்தது.

கெஹேலியவுக்கு வெளிநாடு செல்ல அனுமதி

சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்வுக்கு வெளிநாடு செல்வதற்காக நேற்று (01) அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள சம்மேளனம் ஒன்றில் பங்கேற்பதற்காகவே அவருக்கு நீதிமன்றம் அனுமதி யளித்துள்ளது.

எவ்வாறாயினும், குற்றஞ்சாட்டப்பட்ட அமைச்சர் உத்தியோகபூர்வ கடமைக்காக வெளிநாடு செல்ல விரும்பினால், நீதிமன்றில் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் அதுபற்றி பரிசீலிக்கத் தயாரென நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட பி குழாய்கள் தொடர்பான ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்வ மற்றும் இருவருக்கு எதிராக கொழும்பு உயர் நீதிமன்றம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தது.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் (SLRC) நிதியில் பி குழாய்களை கொள்வனவுசெய்து அரசாங்கத்திற்கு நட்டத்தை ஏற்படுத்தியதாக சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்வ மற்றும் இருவருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தது.

குற்றப்பத்திரிகையை கையளித்த பின்னர், கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்வ உட்பட மூன்று பிரதிவாதிகள் வழக்கு முடியும்வரை வெளிநாடு செல்ல தடைவிதித்து குடிவரவு-குடியகல்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சொல்வதை செயலில் காட்டும்படி ஜனாதிபதியிடம் கூறுங்கள்

விக்டோரியாவிடம் எடுத்துரைத்ததாக மனோ எம்.பி. தெரிவிப்பு

சொல்வதை செயலில் காட்டும்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உங்கள் நல்லுறவை பயன்படுத்திக் கூறுங்களென இலங்கை வந்த அபெரிக்க இராஜாங்க திணைக்கள அரசியல் உப செயலாளர் விக்டோரியா நுலண்டுக்கு தமிழ் பேசும் கட்சிகளின் தலைவர்கள் என்ற முறையில் கூறினோம் - என தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இதுவே தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஏகோபித்த நிலைப்பாடாக இருந்தது என்ற மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியதாவது,

இந்த ஜனாதிபதிக்கு எதிரணித் தலைவர் சஜித், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த, ஜேவிபி தலைவர் அனுர ஆகியோரது 13ஆம் திருத்தம் தொடர்பான சாதகமான நிலைப்பாடு இருக்கிறது. அதைக்கூட அமுல் செய்ய அவர் தயங்குகிறார். வடக்கு கிழக்கு தமிழ்க் கட்சிகள், இந்திய வம்சாவளி மலையகக் கட்சிகள், முஸ்லிம் கட்சிகள் ஆகிய மூன்று தரப்புகள் இப்போது இலங்கை பிரச்சினை தொடர்பில் இருக்கின்றன. இது கடந்த கால மாதான பேச்சுவார்த்தை சூழலின் பின் இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றமாகும். ஆகவே, இப்போது இந்த மூன்று தரப்புடனும் தனித்தனியாக பேசும்படியும், அதன்பின் சர்வ கட்சி மாநாட்டை நடத்தும்படியும், ஜனாதிபதிக்கு ஆலோசனையும் கூறுங்கள் என நான் அவரிடம் கூறினேன்.

இதை அனைத்து தமிழ் பேசும் கட்சிகளும் ஆமோதிக்கிறிர்களா என செயலாளர் விக்டோரியா நுலண்ட் எம்மிடம் வினவினார். இந்நிலையில், அனைத்து தமிழ் பேசும் கட்சிப் பிரதிநிதிகளும் இந்நிலைப்பாட்டை ஆதரித்து, அனைவரிடமும் பேசச் சொல்லுங்கள் என்று கூட்டாக அமெரிக்க இராஜாங்க திணைக்கள அரசியல் துணைச் செயலாளர் விக்டோரியாவிடம் தெரிவித்தன. தமிழ் பேசும் கட்சிகளின் தலைவர்களின் இந்த நிலைப்பாடுகளை ஜனாதிபதிக்கு நாடு திரும்பும் முன் தெரிவிப்பதாக அரசியல் துணைச் செயலாளர் விக்டோரியா நுலண்ட் எம்மிடம் உறுதியளித்தார்.

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை படிப்படியாக ஆராய்ந்து தீர்வு காணும் செயன்முறை அமுலாக வேண்டும். அதற்கு அமெரிக்கா துணை இருக்கும் என இராஜாங்க திணைக்கள அரசியல் உப செயலாளர் எம்மிடம் கூறினார் - என்றார்.

சிலாபம் பிரதேச சபை செயலாளர் ஸ்ரீயானியின் இடமாற்றம் இடைநிறுத்தம்

தேர்தல் கடமைகளுக்குப் பொறுப்பான அதிகாரியான சிலாபம் பிரதேச சபையின் செயலாளர் ஸ்ரீயானி ஜயசிங்கவை தேர்தல் விதிமுறைகளை மீறி, இடமாற்றம் செய்தமையை தற்காலிகமாக இடைநிறுத்தி குருநாகல் மேல் நீதிமன்ற நீதிபதி நிஷாந்த பீரிஸ் தடை உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தேர்தல் விதிமுறைகளை மீறி தம்க்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தை இரத்துச்செய்து ஆணை பிறப்பிக்குமாறு கோரி ஸ்ரீயானி ஜயசிங்க தாக்கல் செய்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி இந்த உத்தரவை பிறப்பித்தார்.

இந்த முறைப்பாட்டின் பிரதிவாதிகளாக வடமேல் மாகாண ஆளுநர் அட்மிரல் வசந்த கரனாகொட, வடமேல் மாகாண சபையின் பிரதம செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன, வடமேல் மாகாண அரசாங்க ஆணையாளர் எச்.எம்.சி.ஜெயவந்த, வடமேல் மாகாண அரச சேவை ஆணைக்குழு உட்பட பலர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டும் கோழைகள் ஐக்கிய மக்கள் சக்தியில் இல்லை

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அக்கரைப்பற்றில் தெரிவிப்பு

கடந்த காலங்களில் இனவாதம், மதவாதத்தால் எமது நாட்டு மக்கள் பல துன்பங்களை அனுபவித்தனர் எனவும், கொவிட் காலத்தில் அடக்கமா, தகனமா என பிரச்சினையாக எழுந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பெரிய கட்சிகள் வாயை மூடிக்கொண்டிருந்தாலும், ஐக்கிய மக்கள் சக்தி ஒவ்வொரு இனத்திற்கும், மதத்திற்கும், மனித நேயத்திற்குமாய் ஒன்றாய் முன்நிற்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆனாலும், சில பாராளுமன்ற உறுப்பினர்களும் கூட மொட்டுவுடன் இணைந்து இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டும் வகையில் செயற்பட்டனர் எனவும், ஐக்கிய மக்கள் சக்தியில் இவ்வாறான கோழைத்தனமான பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லை என்பது மகிழ்ச்சிக்குரிய விடயம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று முன்தினம் (31) அக்கரைப்பற்றில் தெரிவித்தார்.

துய சிங்கள பௌத்தம் ஒருபோதும் இனவாதம் மற்றும் மதவாதத்தின் அடிப்படையில் செயற்படாது எனவும், புத்தர் கூட அனைத்து உயிரினங்களதும் நலனையே நாடி நல்லதையே போதித்தார் எனவும், அந்தக் கோட்பாட்டைப் பின்பற்றும் ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாங்களும் அனைத்து இனங்களுக்காகவும் மதங்களுக்காகவும் சரிசமமாக முன்நிற்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

எல்பிட்டிய, ஓமத்த பகுதியில் இரு பெண்களின் சடலங்கள் மீட்பு

எல்பிட்டிய, ஓமத்த பகுதியிலுள்ள வீடொன்றில் இருந்து கொலை செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் இரு பெண்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக எல்பிட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கண்டுபிடிக்கப்பட்ட பெண்களில் ஒருவர் 80 வயதுடையவர் எனவும் மற்றையவருக்கு 69 வயது எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் இருவரும் கழுத்தை நெரித்து கொல்லப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்ட பெண்கள் இருவரும் உறவினர்கள் என தெரிவித்துள்ள எல்பிட்டிய பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

லங்கா சதொசவில் 4 அத்தியாவசிய பொருட்களின் விலை குறைப்பு

லங்கா சதொச மேலும் நான்கு அத்தியாவசியப் பொருட்களுக்கான விலையைக் குறைத்துள்ளது.

அதற்கமைய, இன்று (02) அமுலுக்கு வரும்வகையில் குறித்த விலைக் குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக லங்கா சதொச குறிப்பிட்டுள்ளது.

ஒரு கிலோ காய்ந்த மிளகாய் 25 ரூபாவினால் குறைக்கப்பட்டு, 1675 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது. ஒரு கிலோ பெரிய வெங்காயம் 15 ரூபாவினால் குறைக்கப்பட்டு 165 ரூபாவுக்கும், உள்நாட்டு சிவப்பரிசி 10 ரூபாவினால் குறைக்கப்பட்டு 169 ரூபாவுக்கும், கோதுமை மா 5 ரூபாவினால் குறைக்கப்பட்டு 230 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படவுள்ளது.

உயிரிழந்த நிலையில் சிறுத்தை மீட்பு

(தலவாக்கலை நிருபர்)

நுவரெலியா பீட்டூ தோட்ட லவர்சிவிப் பிரிவில் நேற்று முன்தினம் (31) மாலை கம்பி வலையில் சிக்கிய நிலையில், சிறுத்தை ஒன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக ஹக்கல வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தேயிலை மலையில் விலங்குகளை வேட்டையாடுவதற்காக அமைக்கப்பட்டிருந்த கம்பி வலையில் சிக்கி இந்த சிறுத்தை உயிரிழந்துள்ளதாகவும் இது நான்கு வயது மதிக்கத்தக்க ஆண் சிறுத்தை எனவும் இதுவே இந்த வருடத்தில் இடம்பெற்ற சிறுத்தையின் முதல் மரணம் எனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த சிறுத்தையின் உடலத்தை ரன்தெனிலை கால்நடை வைத்தியப் பிரிவுக்கு கொண்டுசென்று அங்கு சிறுத்தையின் உடல் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளதாகவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

தினசரி பலாபலன்கள்

சுபசிருது வருடம் தை மாதம் 19ஆம் நாள் வியாழக்கிழமை

மேஷம் — இன்ப அனுபவங்களால் மன நிம்மதி அடைவீர்கள், எண்ணி காரியங்கள் எளிதில் நிறைவேறும்.

ரிஷபம் — எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் சமாளிக்குமளவு பணம் இருக்கும், கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள்.

மிதுனம் — குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும் நாள், சில முக்கிய முடிவுகளை இன்று எடுப்பீர்கள்.

கடகம் — தேவையற்ற அலைச்சல்களால் விரக்தியடைவீர்கள், உங்கள் பணம், பொருள் நஷ்டம் ஏற்படலாம்.

சிம்மம் — போட்டிப் பந்தயங்களில் திடீர் பண வரவு ஏற்படும் நாள், தொழில் வகையில் சகாக்களின் உதவிகள் கிட்டும்.

கன்னி — தொழில் வகையில் திட்டமிட்ட காரியத்தை இன்று நிறைவேற்றுவீர்கள், குடும்ப உறவுகளால் மகிழ்ச்சி.

துலாம் — உடல் உழைப்பு அதிகமாக தேவைப்படும் நாள், எதையும் இலகுவாக எடுத்துக்கொள்ளாதீர்கள்.

விருச்சிகம் — திட்டமிட்ட காரியத்தினை நடைமுறைப்படுத்துவதில் பல தடைகளை சந்திப்பீர்கள். எதற்கும் நிதானம் வேண்டும்.

தனுசு — உங்கள் பங்குதாரர்களால் அதிக லாபங்களை அடைவீர்கள், காதலில் வெற்றிவாகை சூடுவீர்கள்.

மகரம் — நண்பர்களோடு சந்தோஷமாக விருதுண்ணுவீர்கள், நீண்டநாள் கடன் இன்று தீர்ப்போகிறது.

கும்பம் — உங்கள் மனக்குறையை மற்றவர்களிடம் கொட்டி விடுவீர்கள், பிள்ளைகளால் மனக்கவலை அடைவீர்கள்.

மீனம் — வீடு, வாகனங்களால் சற்று செலவுகள் அல்லது தொல்லைகள் உள்ளன. ஆனாலும் குடும்ப சுகம் உண்டு.

திதி	: துவாதசி பி.ப 4.26 வரை பின் திரயோதசி
நட்சத்திரம்	: திருவாதிரை மறுநாள் காலை 6.18 வரை
யோகம்	: மரண யோகம் (சுப காரிய நன்மை இல்லை)
வார குளை	: நெற்று நிசை நோக்கி சுப காரியம் கூடாது
நல்ல நேரம்	: (மு.ப.11.33 – 12.33 மணி வரை
ராகு காலம்	: 2.03 – 3.33 மணி வரை
எமகண்டம்	: 6.33 – 8.03 மணி வரை
குளிகை	: 9.33 – 11.03 மணி வரை
சந்திராஷ்டமம்	: விருச்சிக ராசியினர் வச்சிக்கையக செயல்படவும்
விஷேட தினம்	: பிரதோஷ விரதம்

கணிப்பு : சிவா பாஸ்கரராவ்
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

வர்த்தகர் ஒருவர் கத்தியால் குத்திக்கொலை

சந்தேக நபர் தப்பியோட்டம்

கல்கிஸை, டி-சேரம் வீதியிலுள்ள இரண்டு மாடி வீடொன்றில் நேற்று முன்தினம் (31) மாலை வர்த்தகர் ஒருவர் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தனிப்பட்ட தகராறு காரணமாகவே குறித்த வர்த்தகர் (55 வயது) அவரது மைத்துனராற் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

உயிரிழந்தவர் தனது மனைவியின் சகோதரருடன் மது அருந்திக் கொண்டிருந்ததாகவும், வாக்குவாதம் முற்றியதில் மனைவியின் சகோதரர் வர்த்தகரை கத்தியால் குத்திக் கொலை செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதுடன், கல்கிஸை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சொத்து தகராறில் கொலை நடந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

பாடசாலைகளுக்கான உணவு வழங்குனர்களுக்கு 2.4 பில்லியன் ரூபா அரசினால் வழங்கிவைப்பு

பாடசாலைகளுக்கான போசாக்கு திட்டத்தின் கீழ், கடந்த வருடம் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கான மாகாண மட்ட உணவு வழங்குனர்களுக்கு அரசாங்கத்தினால் மொத்தம் 2.4 பில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதில் மேல் மாகாணத்திற்கு ரூ.39 கோடியே 94 இலட்சத்து 18ஆயிரத்து 220 ரூபா (39,94,18,220), மத்திய மாகாணம் ரூ. 26 கோடியே 99 இலட்சம் (26,99,00,000), கிழக்கு மாகாணம் ரூ.35 கோடி (35,00,00,000), வட மத்திய மாகாணம் ரூ. 25 கோடியே 60 இலட்சம் (25,60,00,000), வடமேல் மாகாணம் ரூ. 22 கோடியே 10 இலட்சம் (22,10,00,000), வட மாகாணம் ரூ. 16 கோடியே 40 இலட்சத்து 50 ஆயிரத்து 718 (16,40,50,718) மற்றும் சப்ரகமுவ மாகாணம் ரூ. 18 கோடியே 29 இலட்சத்து 93 ஆயிரத்து 773 (18,29,93,773) வழங்கப்பட்டுள்ளது.

மாகாணங்களில் உள்ள உணவு வழங்குநர்களுக்கு செலுத்தவேண்டிய பணம் நேற்றுமுதல் மாகாண கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

உணவு வழங்குனர்களுக்கான கொடுப்பனவுகள் ஏற்கனவே வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாக வழங்கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விநோரம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 67
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, பெப்ரவரி 02ஆம் திகதி, வியாழக்கிழமை

மைத்ரி எனும் மாயமான்!

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் கத்தோலிக்க சமூகத்திடம் இருந்து முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன மன்னிப்புக் கோரியதை கத்தோலிக்க திருச்சபை ஏற்றுக்கொள்ளாது என சமூகத் தொடர்புக்கான தேசிய கத்தோலிக்கப் பணிப்பாளர் அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன 2019ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்தபோது இடம்பெற்ற அனர்த்தம் தொடர்பில் கத்தோலிக்க சமூகத்திடமும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களிடமும் மன்னிப்புக் கோரியதையடுத்தே கத்தோலிக்க திருச்சபை இதனைத் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி, தனது ஆட்சிக்காலத்தில் இவ்வாறானதொரு அனர்த்தம் இடம்பெற்றமைக்காக மன்னிப்புக் கோரினார்.

''கத்தோலிக்க சமூகம் என்மீது வெறுப்புக் கொள்ளவில்லை. எனது 15ஆவது வயதில் பைபிள் படித்தேன். மற்றவர்கள் செய்த தவறால் இன்று இழப்பீடு கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எனது பதவிக் காலத்தில் இது போன்ற சம்பவம் நடந்ததற்கு மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். வழக்கின் மீதான நீதிமன்றத் தீர்ப்பில் நான் குற்றம் செய்ததாகக் கூறவில்லை. ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் ஏதேனும் கடுமையான தவறு செய்தால், அந்த தவறுக்கு ஜனாதிபதியே பொறுப்பேற்க வேண்டும். அதுதான் இந்த வழக்கிற்கும் எனக்கும் உள்ள தொடர்பு'' எனவும் மைத்ரி சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியின் இந்த திடீர் அறிவித்தலைப் பார்த்தவுடன் இத்தனை வருட காலத்திற்கு பின்னர் அவர் இப்படி பேசியிருப்பது, மக்களின் உணர்வுகளை மதித்துத்தானா என்ற கேள்வி அனைவரின் மனங்களில் எழுந்தாலும் இந்த மன்னிப்புக் கோரலுக்குப் பின்னால் அவர் தெரிவித்த விடயம்தான் அனைவரின் கவனத்தையும் ஈர்த்திருக்கிறது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடவுள்ளதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சாபம் களமிறங்கவுள்ள தமக்கு கத்தோலிக்கர்கள் உட்பட்ட அனைத்து சமூகத்தினரும் ஆதரவை வழங்குவார்களெனவும் மைத்ரி தெரிவித்த கருத்தே அனைவரினதும் கவனத்தை ஈர்த்திருக்கிறது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மைத்ரி தீர்மானித்திருக்கிறார் என்பதுதான் செய்தி. அதற்காகத்தான் அவர் இப்போது அப்பாவியாக தன்னை காட்டிக்கொண்டு கிறிஸ்தவ மக்களிடம் மன்னிப்புக் கோரியுள்ளார் என்பது தெரிகிறது. ஆனால், மைத்ரியின் இந்த அறிவிப்பை கிறிஸ்தவ சமூகம் மட்டுமல்ல, ஒட்டுமொத்த நாட்டு மக்களும் ஏற்றுக்கொள்வார்களா? முதலில் மைத்ரியின் மனச்சாட்சி மைத்ரியை மன்னிக்குமா என்று வினவத் தோன்றுகிறது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் எத்தனையோ முன்னெச்சரிக்கைத் தகவல்களை உள்நாட்டு, வெளிநாட்டு புலனாய்வுத்துறையின் வழங்கியிருந்தும், அவற்றை கோட்டை விட்டுவிட்டு, தாக்குதலை நடத்த இடமளித்துவிட்டு, தாக்குதல் நடந்த பிறகு கூட தான் தங்கியிருந்த வெளிநாட்டிலிருந்து உடனடியாகப் புறப்பட்டு வராமல் காலத்தை இழுத்துத்த ஒரு அரசியல் கட்சித் தலைவரான மைத்ரிபால சிறிசேன இன்று தெளிவான மனநிலையில் இருந்துதான் இப்படியெல்லாம் பேசுகிறாரா என்று கேட்கத் தோன்றுகிறது. இடையில் சிறை சென்று மீண்ட செம்மல் தென்னாபிரிக்காவின் நெல்சன் மண்டேலாவையும் தன்னுடன் ஒப்பிட்டு மைத்ரி பேசுவதெல்லாம் பெருங்கொடுமை.

மைத்ரிபால அடுத்த ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுவது அவருக்குள்ள அரசியல் ஆசையாக இருக்கக்கூடும். ஆனால், அதற்காக அந்தத் தாக்குதல் சம்பவத்தின் பாதிப்பு ஆழத்தை இன்னமும் அறியாமல் அல்லது புரிந்தும் புரியாமல் போன்று நடித்து, அதனால் பாதிக்கப்பட்ட மக்களின் வெந்த மனங்களில் வேலைப் பாய்ச்சுகிறார் மைத்ரி.

மைத்ரியின் இந்த பொதுமன்னிப்புக் கோரிக்கை உண்மையானதாக இருக்குமானால், அரசியல் நோக்கங்களுக்கு அப்பால் இருந்திருக்குமானால் இது ஏற்கனவே சில வருடங்களுக்கு முன்னரே கேட்கப்படுத்திக வேண்டும். ஆனால், இப்பேரழிருந்தே ஜனாதிபதி தேர்தலுக்குத் தயாராக வேண்டுமென்பதால் ஒப்புக்கு சப்பாணி கட்டியிருக்கிறார் சிறிசேன. அதிலும் நீதிமன்றத் தீர்ப்பின்படி 10 கோடி ரூபா இழப்பீட்டை செலுத்துவதற்கு தடுமாறிக் கொண்டிருப்பதாக மைத்ரி கூறுவது குழந்தைப் பிள்ளைகளுக்கு கதை சொல்வதாகவே இருக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி மைத்ரி உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவங்களுக்காக அல்ல, இந்தப் பொதுமன்னிப்பை இப்படிக் கோரியதே தவறு என்பதைக் கூறி வைக்க விரும்புகிறோம். பிணங்களின் மீது அரசியல் செய்வது என்ற பேச்சுவழக்கை கேட்டிருக்கும் நாம், மைத்ரியின் இந்தப் பேச்சினால் அதனை நேரடியாகவே காணக்கூடியதாக இருக்கிறது.

அரசியல்வாதிகள் அரசியலுக்காக எதனையும் பேசுவார்கள், எதனையும் செய்வார்கள் என்றாலும், மைத்ரி அதில் தனி ஒரு ரகம். ''நல்லாட்சியில் ஜனாதிபதியாகப் பதவியை ஏற்க இடமளித்த ரணிலை வாழ்நாள் முழுவதும் சேர் என்று சொல்வேன்'' என்று ஊடக மாநாடொன்றில் கூறிவிட்டு அரியணை ஏறிய மைத்ரி, பின்னாளில் ரணிலை ஆட்சியிலிருந்து ஒதுக்கியே செயற்பட்டார். ராஜபக்ஷக்களின் பொடுபோக்கு ஊழல்களை அம்பலப்படுத்தி அவர்களிடமிருந்து சொத்துகளைப் பறிப்பேன் என்று மார்தட்டியவர் பின்னர் மஹிந்த ராஜபக்ஷவையே பிரதமராக்கி அழகு பார்த்தார். நீதித்துறை மட்டும் இல்லாதிருந்தால் மைத்ரி ஆட்சியின் ஜனநாயகத்தின் பேரிலான வண்டவாளங்களை மக்கள் பார்த்திருப்பார்கள். நீதித்துறை அன்று இட்ட கொட்டு மைத்ரிக்கு இன்றும் நினைவில் இருக்கும் என்று நம்புகிறோம்.

மைத்ரிபால சிறிசேன முதலில் தனது மனச்சாட்சிக்கு பயந்து செயற்படவேண்டும். ''உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நான் விட்ட தவறுகளும் ஒரு காரணம். அதற்காக என்னை மன்னியுங்கள்'' என்று அவர் கூறினால் கூட அதனால் பறிபோன உயிர்கள் வந்துவிடவோ, ஏற்பட்ட ரணங்களோ குணமாகிவிடவோ போவதில்லை. கிறிஸ்தவ மக்களிடம் மட்டுமல்ல, இந்தத் தவறுகளால் வரலாற்றுப் பழியை சுமந்த முஸ்லிம் மக்களிடமும் மைத்ரி மன்னிப்புக் கோரியிருக்க வேண்டும். புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் இதனை தடுத்து நிறுத்தியிருந்தால் ஓரிரு அடிப்படைவாதிகளின் நாசகார செயல்களுக்காக ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் அவப்பெயரை சுமந்திருக்கவேண்டிய அவலம் வந்திருக்காது.

மாயமான் மைத்ரி இனியாவது புத்திமானாக செயற்படவேண்டும். மக்களின் எதிர்பார்ப்பும் அதுவே!

சுதந்திரம் இல்லாத நாட்டில் சுதந்திர தினம் எதற்கு?

ஜோசப் நயன்

"ஒன்றாக எழுவோம்" எனும் தொனிப்பொருளில் இலங்கையில் 75ஆவது சுதந்திர தினத்தை தேசிய மற்றும் மத ஐற்றுமையை பிரதிபலிக்கும் வகையில் மேற்கொள்வதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு அவற்றுக்கான பூர்வாங்க நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

"நூற்றாண்டுக்கு ஒரு படி" என்ற வாசகத்தின் அடிப்படையில் இந்த பெருமை மிகுமிழாவில் 2048ஆம் ஆண்டு 100ஆவது சுதந்திர தினம்வரை மாறாத கொள்கையை அமுல்படுத்தும் வகையில் அடுத்த 25 ஆண்டுகளுக்கு அரசாங்கத்தின் புதிய சீர்திருத்த நிகழ்சித்திட்டமும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய சுதந்திர தினத்தின் பிரதான நிகழ்வுகள் பெப்ரவரி 4ஆம் திகதி காலை 8.30 மணிக்கு காலி முகத்திடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நடைபெறவுள்ளன.

சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள தேசபிதா டி.எஸ் சேனநாயக்காவின் உருவச்சிலைக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்திய பின்னர் ஜனாதிபதி செயலக வளாகத்தில் உள்ள தேசிய மாவீரர்களின் உருவச்சிலைக்கு அஞ்சலி செலுத்துவதுடன் சுதந்திர தின வைபவம் ஆரம்பமாக உள்ளது.

அதேவேளை 50,000 இளைஞர்களுடன் சுதந்திர தினத்தை முன்னிட்டுத் துய்மையான பசுமை நகர திட்டம் ஒன்றை பெப்ரவரி 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை நாட்டிலுள்ள 335 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஏனைய சுதந்திர தினங்களை போல் இல்லாது 75ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்களுக்கு தலைநகர் கொழும்பு தயாராகி வருகின்ற போதிலும் தமிழர் தாயகப் பகுதிகளில் சுதந்திர தினத்திற்கு எதிரான கரிநாள் போராட்டங்களுக்கான தயார்படுத்தல்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.தமிழர் தேசம் மீதான ஆக்கிரமிப்பு நாள் எனும் கோஷத்துடன் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இம்முறை சுதந்திர தினக் கொண்டாட்டங்களை எதிர்ப்பதாகவும் இலங்கையின் சுதந்திர தினம் என்பது தமிழர்களுக்கு கரிநாள் எனவும் பிரகடனப்படுத்தியுள்ளது.

அதேவேளை யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து மட்டக்களப்பு வரையிலான மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொள்வதற்காக சிலில் சமூகம், மதத்தலைவர்கள், அரசியல் பிரமுகர்களிடம் ஆதரவை கோரியுள்ளதுடன், 4ஆம் திகதி போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளனர். ஆரம்பத்தில் சுதந்திர தினத்திற்கான நிகழ்வு ஒழுங்குகளுக்காக 575 மில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டிருந்த நிலையில், தற்போது 200 மில்லியன் ரூபாவாக அதனை மட்டுப்படுத்துவிழாளதாக உள்நாட்டலுவல்கள் இராஜங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பின்னணியில் வடக்கு மாகத்திரம் இன்றி செழுப்பிலும் நாடு தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சுதந்திர தினம் கொண்டாட எனக்கோரி ஆங்காங்கே எதிர்ப்பு நடவடிக்கைகளும் போராட்டங்களும் ஊடக சந்திப்புகளும் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான நிலையில் நாட்டின் 75ஆவது சுதந்திர தினமானது இலங்கையால் மாத்திரமில்லாமல் சர்வதேச நாடுகளாலும் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருகின்றது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்று சில நாட்களில் 75ஆவது சுதந்திர தினத்திற்கு முன்பாக இனப்பிரச்சினைக்கான தீர்வையும் தமிழ் தரப்பினரின் முன்னிலைப்படுத்தப்பட வேண்டிய கானி விடுவிப்பு, அரசியல்கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் தொடர்பிலான பிரச்சினைகளுக்கு தீர்வை முன்வைக்கப் போவதாகவும் தெரிவித்திருந்தார்.

அது மாத்திரமின்றி தமிழ் மக்களின் கோரிக்கைகளை உள்வாங்குவதற்கான முதல் கட்ட நடவடிக்கையாக தமிழ் மக்கள் சார்நது செயற்படும் அரசியல் கட்சிகளுடனான பேச்சுவார்த்தைகளையும் நடத்தியிருந்தார்.

முதல்கட்டப் பேச்சுவார்த்தை இடம்பெற்றிருந்தாலும் ஜனாதிபதியின் வடக்குக்கான விஜயம் ஒன்று இடம்பெற்ற போதிலும், இனப்பிரச்சினைக்கான தீர்வோ, காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைக்கான நகர்வுகளோ, கானி விடுவிப்புக்கான அறிகுறியோ ஒப்பீட்டளவில் துளிகூட இடம்பெறவில்லை என்றே சொல்ல வேண்டும்

சுதந்திர தினத்திற்கு சில நாட்களே காணப்படுகின்ற நிலையில், தமிழர் தரப்பினுடைய எதிர்பார்ப்பும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வாக்குறுதியும் நிறைவேறுவதற்குமான சாத்தியப்பாடு என்பது மிக மிகக் குறைவாகவே உள்ளது.

கடந்த நல்லாட்சிக்கால அரசில் ரணிலின் வாக்குறுதிகள் எவ்வாறு ஆட்சியின் இறுதிவரை எதிர்பார்ப்பை ஏற்படுத்தி காளல் நீராளதோ, அதேபோன்று சுதந்திர தினத்திற்கு முன்னாரான தீர்வும் காளல் நீர் என்பதும் ரணிலின் வாக்குறுதி எப்போதும் எட்டாக்கனி என்பதை நிரூபணமாக்கியுள்ளது.

ஆனாலும், இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான முன்னெடுப்புகளில் இந்திய - இலங்கை உடன்படிக்கையிலூடாக கொன்டுவரப்பட்டு கிடப்பிலுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக தற்காலிக சமாளிப்புகளையாவது மேற்கொள்ள பல எத்தனிப்புகளை ரணில் தலைமையிலான அரசாங்கம் மேற்கொன்டு வருகின்றது. ஆனாலும், இனவாத ஆயுதங்களை கையில் எடுக்கும் தென்பகுதியை சேர்ந்த சில அரசியல் கட்சிகள் தொடர்ச்சியாக சிங்கள மக்கள் மத்தியில் 13ஆம் திருத்த சட்டத்திற்கு எதிரான பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

குறிப்பாக விமல் வீரவங்ச அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றில் 13ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்துவதன் ஊடாக நாட்டில் மீண்டும் ஒரு இனக்கலவரம் தோன்றலாம் எனவும் தனித்தமிழ் ஈழம் 13ஆவது திருத்தச் சட்டத்தினால் சாத்தியப்படும் என்ற விதமான கருத்துகளும் பதிவிட்டிருந்தார்.

மறுபுறம் 13ஆவது திருத்தமாக தான்டி சுயநிர்ணய உரிமையுடனான மீளப்பெறமுடியாத சமஷ்டி முறையிலான தீர்வு உள்ளடங்காத 13ஆவது திருத்தச் சட்டம் ஒருபோதும் தமக்குத் தேவையில்லையென தமிழர் தரப்பின் பெரும்பாலானோர் தெரிவிக்கின்றனர்.

ஆனாலும், தற்காலிக சமாளிப்பில் சிங்கள மக்களை சீண்டாத தமிழ் மக்களையும் ஆக்கவாய்ப்படுத்த கூடிய ஒரு தீர்வு நோக்கிய முன்னெடுப்பை மேற்கொள்ள முடியாத பட்சத்திலோ, அங்கீகரிக்க முடியாத பட்சத்திலோ

22ஆவது அரசியல் அமைப்பின் ஊடாக இனப்பிரச்சினைகான தீர்வை முன்வைக்கக் கூடிய சாத்தியப்பாடுகள் தொடர்பாக அரசாங்கம் ஆராயத் தொடங்கியுள்ளது.

ஆனாலும், 13ஆவது திருத்தச் சட்டதைக் கைவிட்டு மேற்கொள்ளும் எந்தவொரு பதிய அரசியல் தீர்வையும் இந்தியா ஒருபோதும் ஏற்காது என்பதுடன், அவற்றுக்கான முனெடுப்புகள் இடம் பெற்றால் இந்தியா - இலங்கை இடையிலான இராஜதந்திர ரீதியிலான உறவில் இத்தீர்மானம் விரிசலாக அமையலாம்.

நாட்டில் ஏற்கனவே உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலை மற்றும் சர்வதேச நாணய நிதியக் உடன் தொகை பெறுவதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் மற்றும் அரச ஊழியர்களுக்கான சம்பளம் வழங்குவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை சமாளிக்க முடியாத நிலை, வாக்குறுதி வழங்கிய விதமாக இனப்பிரச்சினைக்கான தீர்வும் எட்டப்படாத பின்னணியில் 75ஆவது சுதந்திர தினக் கொன்டாட்டங்களுக்கு எதிரான கோஷங்களும் அரசாங்கத்தின் மீதான மக்களின் எதிர்ப்பைப் பிரதிபலித்துக் காட்ட ஆரம்பித்துள்ளன.

இதே நேரம் வடக்கு - கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோருக்கான உறவுகள் சார்பாக ஞாயிற்றுக்கிழமை (29) மன்னாரில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் "சுதந்திரம் இல்லாத நாட்டில் எதற்கு சுதந்திர தினம் ?" எனவும் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக இலங்கை அரசின் சுதந்திர தினத்தன்று கறுப்புக் கொடிகளை ஏற்றி சுதந்திர தினத்தை எதிர்க்கப் போவதாக பகிரங்கமாக தெரிவித்துள்ளனர்.

மேலும், ஜனவரி 13ஆம் திகதி சர்வகட்சிக் கூட்டத்திலும் அதேவேளை தமிழ் அரசியல் பிரதிநிதிகள் மத்தியிலான உரையாடலின்போது மேற்கோள்ளப்பட்ட தீர்மானங்களும் அதேவேளை ஜனாதிபதியால் வழங்கப்பட்ட வாக்குறுதியின் ஆரம்பகட்டக் கோரிக்கைகளே நிறைவேற்றப்படாத நிலையில், நாங்கள் பார்வையாளராக அரசங்கத்தின் சர்வகட்சிக் கூட்டங்களிலோ சுதந்திர தின நிகழ்வுகளிலோ கலந்துகொள்ளப் போவதில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக சுதந்திர தினக் கொன்டாட்டங்களுக்கான எதிர்ப்பு தமிழ்த் தரப்பிலும் சுதந்திர தினப் புறக்கணிப்புகள் தமிழர் தாயகப் பகுதிகளிலுமே அதிகம் இடம்பெற்றாலும் தற்போது அவை தென்பகுதியிலும் பரவலடைந்துள்ளதுடன், சுதந்திர தினக் கொன்டாட்டங்கள் மற்றும் அரசியல் கத்தரிக் கொள்கைகளுக்கான எதிர்ப்புக் கோஷங்களும் சிங்களத் தரப்பிலும் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளன.

இவ்வாறான நெருக்கடிக்குள் மக்களால் தேர்தெடுக்கப்படாத தலைவர் ஒருவரின் தலைமையில் முன்னெடுக்கப்படுகின்ற இலங்கையின் சுதந்திர தினம் மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு எவ்வாறாக இருக்கப் போகின்றது என்பதும் இலங்கையர்கள் மாத்திரம் இல்லாமல் சர்வதேச அரங்கிலும் உற்று நோக்கப்பட்டு வருகின்றது.

ஒரு சுதந்திர தினத்தை, ஓர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை,சொந்த நிதியில் நடத்த முடியாத நாடு, நாட்டின் பிரஜைகளுக்கு தேவையான போசாக்கான உணவு, மருந்தை வழங்க முடியாத நாடு, இலவச பாடநூல்களை, அரச ஊழியர்களுக்கான சம்பளத்தை, பொதுமக்களுக்கு தேவையான பாதுகாப்பை வழங்கமுடியாத நாடு, அதற்கு சுதந்திர தினம் ஒரு கேடு.

வவுனியா பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற வடக்கு – கிழக்கு இளைஞர் யுவதிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சி நெறிக்கான ஆரம்ப நிகழ்வு



வவுனியா பல்கலைக்கழகத்தின் வியாபாரக்கற்கைகள் பீடத்தின் தொழில் சமூகத்தொடர்பு மையத்தின் (ICIC) ஊடாக வடக்கு கிழக்கு இளைஞர், யுவதிகளுக்கு தலைமைத்துவப்பயிற்சி வழங்குவதற்கான ஆரம்ப நிகழ்வானது ஐக்கிய நாடுகளின் அபிவிருத்திற் நிறுவனம் (UNDP) மற்றும் ஏனைய பங்காளர்களான சமூக அபிவிருத்தி நிறுவனங்களின் அனுசரணையுடன் 31.01.2023 அன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது. இந்நிகழ்வானது துணைவேந்தர் பேராசிரியர் த. மங்களேஸ்வரன் தலைமையில், துணைவேந்தர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வானது வழமை போல் கலாசார ரீதியாக விளக்கேற்றற்றுடன் ஆரம்பித்தது. அதன் பின்னர் வியாபாரக்கற்கைகள் பீடாதிபதி கலாநிதி யோ.நற்றீஸ்னேயன் தனது வரவேற்புரையில் வடக்கு - கிழக்கு இளைஞர், யுவதிகளுக்கு தலைமைத்துவப் பயிற்சியை மேற்கொள்ள ஒன்பது பிரிவுகளாக இப்பயிற்சி வகுப்பானது பிரிக்கப்பட்டு 11.02.2023 இல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஆரம்பிக்கவுள்ளதாகவும், இவ்வாறான பயிற்சி வகுப்புகளின் முக்கியத்துவம் மற்றும் இதன் நிலைத்தன்மையை எவ்வாறு பேணலாம் எனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் த.மங்களேஸ்வரன் தனதுரையில் இவ்வாறான பயிற்சி வகுப்புகள் ஏன் இளைஞர்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும், இப்பயிற்சி நெறியானது வடக்கு - கிழக்கு இளைஞர், யுவதிகளை நல்வழிப்படுத்தி அவர்களுக்கான எதிர்காலத்தை கட்டியெழுப்ப உதவி புரியும் எனவும் தெரிவித்தார். மேலும், வவுனியா மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் திரேஷ்குமார் தனதுரையில் இந்த தலைமைத்துவப் பயிற்சி வகுப்புகள் இளைஞர்களை ஓர் அபிவிருத்திப் பாதைக்கு வழிநடத்திச் செல்ல வேண்டுமென்று தெரிவித்தார்.

அடுத்ததாக யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் ஆ.சிவபாதசுந்தரம் தனது உரையில் அரசாங்க நிறுவனங்களில் மேலதிகமாக உள்ள மனித வளங்கள் வீணடிக்கப்படுவதாகவும் இவ்வாறான சவால்களை இது போன்ற பயிற்சி வகுப்புக்களில் எடுத்துரைத்து வருங்கால இளைஞர்களை சரியான முறையில் வழிநடத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும், SDG16 செயற்றிட்ட ஒருங்கிணைப்பாளர் மொஹமட் முஷைன் இப்பயிற்சிக்காக தெரிவுசெய்யப்பட்ட இளைஞர்கள் தமது சமூகத்தின் தலைவர்களாக செயற்படுவதோடு, இப்பயிற்சியின் ஊடாக பெறப்பட்ட அறிவு மற்றும் அனுபவங்களை தன் சார்ந்தோருக்கும் சமூகத்திற்கும் எடுத்துரைப்பவராகத் திகழ வேண்டும் என்று தெரிவித்தார்.

அடுத்ததாக துணைக் குடியிறைப் பிரதிநிதி மாலின் ஹோவிக் தனது உரையில் தான் பெற்ற அனுபவங்களை வைத்து இவ்வாறான பயிற்சி வகுப்புகளின் முக்கியத்துவம் பற்றியும் இது போன்ற பயிற்சி வகுப்புகள் ஏன் இங்கே யுவதிகளுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பின்னர் வவுனியாப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் வியாபார கற்கைகள் பீட பீடாதிபதி, UNDP பிரதிநிதி மாலின் ஹோவிக்கின் சேவையைப் பாராட்டி நினைவுச்சின்னம் ஒன்றை வழங்கி கௌரவித்தார். இறுதியாக வவுனியாப் பல்கலைக்கழகத்தின் வியாபார கற்கைகள் பீடத்தின் தொழில் சமூகத்தொடர்பு மையத்தின் ஒருங்கிணைப்பாளர் சிவநேற்தீர்வாவின் நன்றி உரையுடன் இந்நிகழ்வு இனிதே நிறைவு செய்யப்பட்டது.

இன்றைய நாளில்..

*** 1822 – பிரித்தானிய இலங்கையின் ஆளுநராக சேர் எட்வேர்ட் ஹெஜ்ட் நியமிக்கப்பட்டார்.**

***1901 – விக்டோரியா மகாராணியின் இறுதி நிழ்வுகள் இடம்பெற்றன.**

***1971 – ஈராநிலங்களின் பாதுகாப்பு, அவற்றின் தாங்குநிலைப் பயன்பாடு தொடர்பான பன்னாட்டு ராம்சர் சாசனம் ஈரானில் கையெழுத்திடப்பட்டது.**

***1971 – உகாண்டாவில் ஒரு வாரத்திற்கு முன்னர் இடம்பெற்ற இராணுவப் புரட்சியின் பின்னர் இடி அமீன் அரசத்தலைவராகத் தன்னை அறிவித்தார்.**

*** 1990 – தென்னாபிரிக்காவின் இனவொதுக்கல்: தென்னாப்பிரிக்க அரசத்தலைவர் பிரடெரிக் வில்லியம் டி கிளார்க் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் தடையை நீக்குவதாகவும், நெல்சன் மண்டேலாவை சிறையில் இருந்து விடுவிக்கவிருப்பதாகவும் நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.**

நக்கல் நமசிவாயம்

தேர்தலுக்கு பொலிஸ் காவல் தேவை.. நிலைமை இப்படியே போனால் பொலிஸுக்கும் பொலிஸ் காவல் போடோனோ போல என்னங்கோ..!

பழுதடைந்துள்ள காரைநகர் – ஊர்காவற்றுறை கடற்பாதை

கடற்பயணத்தில் ஈடுபடும் மக்கள் அசௌகரியம்

காரைநகர் - ஊர்காவற்றுறைக்கு இடையில் கடற்பயணத்தில் ஈடுபட்ட கடற்பாதை பழுதடைந்ததனால் கடற்பயணத்தில் ஈடுபடும் பயணிகள் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்கின்றனர். அத்துடன், கடற்பாதையினை இயக்குவதற்கான எரிபொருளை கொள்வனவுசெய்வதிலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வருமானம் இன்மையாக அறியமுடிகிறது.

காரைநகர், வட்டுக்கோட்டை பகுதிகளிலிருந்து ஊர்காவற்றுறை நீதிமன்றம், வைத்தியசாலை, பிரதேச செயலகம் ஆகியவற்றில் கடமை புரியும் உத்தியோகத்தர்கள் மற்றும் வேறு தேவைகளுக்கு பயணம் செய்வோர் குறித்த கடற்பாதையை பயன்படுத்தி வந்தனர்.

இந்த கடற்பாதை பழுதடைந்ததால் கட்டணம் செலுத்தி படகுமூலம் பயணம் செய்யவேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

குறித்த கடற்பாதையானது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கண்காணிப்பின்கீழ் இயங்கிவந்தது. இருப்பினும், அவர்களிடம் நிதி வசதி இல்லாத காரணத்தால் அந்த பாதையை சீர்செய்ய முடியவில்லை.

இதனை சரிசெய்வதற்காக காரைநகர் பிரதேச சபையில் "குறித்த கடற்பாதையை பிரதேச சபை பொறுப்பேற்று பராமரிப்பது" என தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ஆனால், கடற்பாதையினை பிரதேச சபையிடம் கையளிப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை மறுத்துள்ளதாக காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் க. பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

எனவே, பிரதேச சபை அல்லது வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஒரு முடிவுக்கு வந்து இந்தக் கடற்பாதையை மீளவும் சேவையில் ஈடுபடுத்துமாறு மக்கள் வேண்டுகின்றனர்.

உலகில் புகைப்படம் எடுப்பதற்கான சிறந்த 50 இடங்களில் இலங்கை

'பிக் 7 டிராவல்' பயண இணையதளம் வெளியீடு

'பிக் 7 டிராவல்' எனும் பயண இணைய தளத்தினால் 2023ஆம் ஆண்டிற்கான உலகின் பார்வைக்கு கவர்ச்சிகரமான, இன்ஸ்டாகிராமில் புகைப்படம் எடுக்கக்கூடிய 50 இடங்களில் இலங்கையும் பட்டியலிடப்பட்டுள்ளது.

அதன்படி, 'பிக் 7 டிராவல்' (BIG 7 Travel)இன் 2023 ஆம் ஆண்டிற்கான தரப்படுத்தலில், உலகின் 9ஆவது மிகவும் பார்வைக்கு கவர்ச்சியான, புகைப்படம் எடுக்கக்கூடிய இடமாக இலங்கை தரப்படுத்தப்பட்டுள்ளது.

"இந்த சிறிய தீவு, நாடு எங்கள் பட்டியலில் உள்ள மற்ற சில இடங்களைப்போல நன்கு அறியப்பட்டதாக இருக்காது, ஆனால், இது நிச்சயமாக பார்வையிடத்தக்கது" என அந்த இணையதளம் இலங்கையை விவரித்துள்ளது.

13 மில்லியனுக்கும் அதிமான இன்ஸ்டாகிராம் ஹேஷ்டேக்குகள் மற்றும் 16.4 பில்லியன் டிக்டோக் பார்வைகளுடன், இலங்கையின் பல புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பகிரப்படுகின்றன.

சீகிரியாவின் பழங்கால கோட்டையிலிருந்து தென் கடற்கரையின் பிரமிக்க வைக்கும் கடற்கரைகள் வரை, கலாசார, இயற்கை மற்றும் வரலாற்று ஈர்ப்புகளின் அனித்துவமான கலவையை இலங்கை கொண்டிருப்பதாக அந்த இணையதளம் மேலும் தெரிவிக்கிறது.

வசந்த முதலிகேவுக்கு மேலும் மூன்று வழக்குகளில் பிணை

3 வழக்குகள் தொடர்பில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப்பாளர் வசந்த முதலிகேவுக்கு கோட்டை நீதவான் நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதி வழங்கியுள்ளது.

அது தொடர்பான வழக்குகள் நேற்று (01) நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதேவேளை, பயங்கரவாதத் தடை குற்றச்சாட்டின் கீழான குற்றச்சாட்டிலிருந்து வசந்த முதலிகேவை விடுவித்து கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் (31) உத்தரவு பிறப்பித்திருந்தது.

நீதிமன்ற உத்தரவை ஏற்காதது மற்றும் மீறியது ஆகிய குற்றச்சாட்டுகளுக்காகவே இந்தப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு குற்றச்சாட்டிலும் தலா ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் அவரை விடுவிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார். இந்நிலையில், நிலுவையிலிருந்த மேலும் 2 வழக்குகளில், வசந்த முதலிகே நேற்று பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட 4 இந்திய மீனவர்களின் படகு உரிமைக்கான வழக்கு

மார்ச் முதலாம் திகதிக்கு ஒத்திவைப்பு

இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட நான்கு இந்திய மீனவர்களின் படகு உரிமைக்கான வழக்கு எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு கட்டளைக்காக தவணை இடப்பட்டுள்ளது.

பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி பிரவேசித்த குற்றச்சாட்டில் இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட நான்கு படகுகளின் உரிமை தொடர்பான வழக்கு நேற்று (01) ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதவான் ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த படகுகளுக்கான உரிமை யாளர்களும் நீதிமன்றத்தில் முன்னிலையாகி இருந்தனர். வழக்கை ஆராய்ந்த நீதவான் மார்ச் மாதம் முதலாம் திகதி கட்டளைக்காக திகதியிட்டுள்ளார்.

வழக்கு தொடுனர் சார்பில் யாழ். மாவட்ட நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரி எம்.ராஜேந்திரா முன்னிலையாகியிருந்தார்.

பேராதனைப் பல்கலை முன்னாள் உபவேந்தரின் வீட்டைத் தாக்கி சேதப்படுத்திய சம்பவம்

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 14 மாணவர்களுக்குப் பிணை

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் அத்துல சேனாரத்னவின் வீட்டைத் தாக்கி சேதப்படுத்திய சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 14 பல்கலைக்கழக மாணவர்களையும் கடுமையான நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்க கண்டி பிரதான நீதவான் ஸ்ரீநிதா விஜேசேகர நேற்று (01) உத்தரவிட்டார்.

பல்கலைக்கழக மாணவர்கள் 14 பேரையும் தலா 15,000 ரூபா ரொக்கப் பிணையிலும், தலா 5 இலட்சம் ரூபா சரீரப் பிணையிலும் செல்ல உத்தரவிட்டுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்கள் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி சமன் தந்திரீக் மற்றும் பல சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் ஆஜராகினர்.

சந்தேக நபர்களான பலங்கலை மாணவர்களை எதிர்வரும் மார்ச் மாதம் 15ஆம் திகதி மீண்டும் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டார்.

வழக்கின் 14ஆவது சந்தேகநபரான பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தற்போதைய தலைவரான சாமோத் தட்சர, ஒவ்வொரு மாதமும் முதல் மற்றும் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.00 முதல் மதியம் 12.00 மணிக்கிடையில் கொழும்பு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டார். .

ஏனைய சந்தேகநபர்களை ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை பேராதனை பொலிஸில் ஆஜராகுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பஸ்ஸுடன் மோதி மோட்டார்சைக்கிள் விபத்து: தாயும் மகனும் சம்பவ இடத்தில் பலி!

தம்புள்ளை – குருநாகல் வீதியில் கொகரெல்ல வைத்தியசாலைக்கு அருகில் நேற்று மதியம் இடம்பெற்ற மோட்டார்சைக்கில் விபத்தில் தாயும் மகனும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

பஸ் ஒன்றுடன் மோட்டார்சைக்கிள் மோதியதிலேயே குறித்த விபத்து இடம் பெற்றுள்ளதாக கொகரெல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

மல்சிறிபுர நீரமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதான ரத்நாயக்க மற்றும் 62 வயதான கமலாவதி ஆகிய இருவருமே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளனர். குருநாகல் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த தனது மனைவியைப் பார்ப்பதற்காக தனது தாயுடன் சென்றுகொண்டிருந்தபோதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக் கின்றனர். சந்தேகத்தின்பேரில் பஸ்ஸின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

போலி ஆவணங்களைத் தயாரித்த இருவர் தலங்கம பொலிஸாரால் கைது

குடிவரவு-குடியகல்வுத் திணைக்களத்திற்கு வரும் நபர்களிடம் பணம் மற்றும் தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொண்டு போலி ஆவணங்களைத் தயாரித்த குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸார்களுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் (31) மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பத்தரமுல்லை, சுஹுரு பாய குடிவரவு-குடியகல்வுத் திணைக்களத்திற்கு கடவுச்சீட்டு பெற்றுக்கொள்ள வந்த நபர்களிடம் போலியான வேலைவாய்ப்பு அனுமதிப்பத்திரம் தயாரித்து, ஒருநாள் சேவையின் மூலம் கடவுச்சீட்டை தயார் செய்து தருவதாகக் கூறி மோசடி செய்த குற்றச்சாட்டில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் பல்வேறு நபர்களிடம் 1000 முதல் 20 ஆயிரம் ரூபாவரை வசூலித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

பொலிஸ் நிலையத்துக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளுக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், விண்ணப்பதாரர்களிடமிருந்து பலவந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் மற்றும் தேசிய அடையாள அட்டைகளும் மீட்கப்பட்டதுடன், சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் தலங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், கடவுச்சீட்டு பெற செல்பவர்கள், இத்தகைய மோசடியாளர்கள் தொடர்பில் எச்சரிக்கையாக இருக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

வைத்தியர்களின் கட்டாய ஓய்வு வயது வர்த்தமானி மீதான இடைக்காலத் தடை நீதிமன்றத்தால் நீடிப்பு

மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு

அரச ஊழியர்களின் கட்டாய ஓய்வு தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் வைத்தியர்கள் மற்றும் விசேட வைத்தியர்களை உள்ளடக்கியதை இடைநிறுத்தி பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவை எதிர்வரும் மார்ச் 29 வரை மேன்முறையீட்டு நீதிமன்றம் நீடித்துள்ளது.

176 விசேட வைத்தியர்களால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட சோபித ராஜகருணா மற்றும் தம்பிக்க கணேபொல ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் குழாம் நேற்று முன்தினம் (31) இந்த இடைக்கால உத்தரவை நீடித்துள்ளது.

பின்னர், மனு மீதான விசாரணை மார்ச் 24, 28 மற்றும் 29 ஆகிய திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் தினேஷ் குணவர்தன, அரச துறை ஊழியர்கள் 60 வயதிற்குள் ஓய்வு பெறுவதை கட்டாயமாக்கும் அசாதாரண வர்த்தமானி அறிவித்தலை டிசம்பர் 05ஆம் திகதி வெளியிட்டிருந்தார்.

அதன்படி அரச ஊழியர்களின் கட்டாய ஓய்வு வயது ஜனவரி 01, 2023 முதல் 60 என தெரிவிக்கப்பட்டிருந்தது.

விசேட வைத்தியர்கள் இதற்கு முன்னர் 63 வயதுவரை பணியாற்றுவதற்கு முன்பு அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இலங்கைக்கான பலஸ்தீனத் தூதுவர், ஸுஹைர் ஹம்தல்லா ஸயிட், சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட்டை அவரது அமைச்சில் சிநேகபூர்வமாக சந்தித்தார்.

நுகர்வோர் அதிகாரசபையினரின் சோதனையில் கடந்த ஆண்டு 111 மில்லியன் ரூபா அபராதம்

வியாபார நிலையங்களில் 2022ஆம் ஆண்டு நுகர்வோர் அதிகார சபை முன்னெடுத்த சோதனை நடவடிக்கைகளுக்கமைய தொடரப்பட்ட வழக்குகளில் 111 மில்லியன் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு 13 ஆயிரத்து 980 சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதில் 13 ஆயிரத்து 389 வழக்குகள் நிறைவடைந்துள்ளதுடன், அதனூடாக இந்த அபராதத் தொகை கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பில்கட், மருந்துகள், குழந்தைகளுக்கு பயன்படுத்தும் உபகரணங்கள் மற்றும் மின்சார உபகரணங்கள் உள்ளிட்டவை தொடர்பில் கடந்த ஆண்டு சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டன.

2005ஆம் ஆண்டுமுதல் இதுவரையில் நுகர்வோர் அதிகார சபை சுமார் 90 ஆயிரம் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

01.02.2023 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

நாணயம்	கொள்வனவு வீதம்	விற்பனை வீதம்
அவுஸ்திரேலியன் டொலர்	141 0632	152 5057
கனேடியன் டொலர்	157 821	17 7263
சீன யுவான் (ரென்மின்பி)	41 25 5	44 6173
யூரோ	278 0336	3 3 7014
ஜப்பான் யென்	1 6432	1 756
சிங்கப்பூர் டொலர்	161 2855	172 7643
ஸ்ரேலிங் பவுன்	330 6273	347 4556
சுவிஸ் பிரான்ங்	278 5557	3 7 27 0
ஐ.அ.டொலர்	25 3824	260 2831

நாடு	நாணயம்	விற்பனை வீதம்
பஹ்ரைன்	பஹ்ரைன் தினார்	85 4088
குவைட்	குவைட் தினார்	0,075 222
ஓமான்	ஓமான் றியால்	83 4634
கட்டார்	கட்டார் றியால்	87 7532
சவூதி அரேபியா	சவூதி அரேபிய றியால்	85 3824
ஐக்கிய அரபு இராச்சியம்	ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம்	87 4814

தேசிய லொத்தர் சபை
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செல்வாக்கிழமை 2023.01.31
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5017
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,928,476.00
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 1 1 9 3 2 4

கொவிதெத
சீட்டிழுப்பு இலக்கம் 3259
எடுத்த சீட்டிழுப்பில் சுப்பர் பரிசு ரூ. 75,740,972.40
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 39 49 78 80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1472
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,958,910.40
வெற்றி இலக்கம் 1 3 1 9 6 2

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1047
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 81,064,960.00
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 03 38 48 55

ராசி செய பலன்
சீட்டிழுப்பு இலக்கம் 326
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,680,950.20
வெற்றி இலக்கங்கள் 05 17 53 54
விசேட இலக்கம்

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1365
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 296,903,802.00
அதிகூடிய பணப் பரிசு ரூ. 10,000,000.00
அதிகூடிய வெற்றி சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து D
மகா இலக்கம் 11
வெற்றி இலக்கங்கள் 06 14 54 59

பகிரங்க ஏலவிற்பனை

வெலிபல் பினான்ஸ் நிறுவனத்தில் உத்தரவாத அடிப்படையில் அடகு வைத்து கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் இல: 310, காலி வீதி, கொழும்பு 03 இல் 2023 பிப்ரவரி மாதம் 23 திகதி மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ. பின்தள்ளி போடவோ வெலிபல் பினான்ஸ் நிறுவனத்திற்கு உரிமை உள்ளது

தங்க கடன் பிரிவு
வெலிபல் பினான்ஸ் பீ எல் சீ
இல: 310, காலி வீதி, கொழும்பு 03

வெலிபல் பினான்ஸ்

கோம்பயன் மணல் மயானப் பகுதியில் மருத்துவக் கழிவுகளை எரிக்க யோசனை

யாழ். மாநகர சபையில் விசேட கலந்துரையாடல்

(யாழ். நிருபர்)

யாழ். போதனா வைத்தியசாலையில் மருத்துவக் கழிவுகளை உரிய முறையில் அழிப்பதற்கு யாழ். மாநகர சபைக்குட்பட்ட கோம்பயன் மணல் இந்து மயானப் பகுதியில் ஓர் இடத்தை தெரிவுசெய்து அந்த இடத்தில் கழிவகற்றல் பொறிமுறை உருவாக்குவது தொடர்பில் நேற்று முன்தினம் (31) யாழ். மாநகர சபையில் விசேட கலந்துரையாடலொன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மாநகர சபையின் முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட், போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, மாநகர சபையின் ஆணையாளர், மாநகர சபையின் பொறியியலாளர்கள், மாநகர சபை உறுப்பினர் ந.லோகதயாளன், தொழிற்துப்பறியலாளர்கள் குறித்த கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

குறிப்பாக, வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகள் தற்போது தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கே அழிக்கப்படுகின்றன. எனினும், யாழ்ப்பாண வைத்தியசாலையானது, யாழ்ப்பாண குடாநாட்டிலுள்ள அனைவரது வைத்திய தேவையைப் பூர்த்திசெய்கின்ற ஒரு வைத்தியசாலை என்பதனால் அதிகளவு மருத்துவக் கழிவுகள் ஒவ்வொரு நாளும் சேகரிக்கப்படுகின்றன.

எனவே, அந்தக் கழிவுகளை யாழ்ப்பாண மாநகரத்துக்குட்பட்ட கோம்பயன் மணல் இந்து மயானப் பகுதியில் பாதுகாப்பான முறையில் பொதுமக்களுக்கு இடைஞ்சல் இல்லாத வகையில் அழிப்பது தொடர்பில் ஆராயப்பட்டது.

ஏ9 வீதியில் மயங்கி விழுந்து உயிரிழந்த முதியவரை அடையாளம் காண உதவுமாறு பொலிஸார் கோரிக்கை

(வவுனியா நிருபர்)

ஏ9 வீதியில் மயங்கி விழுந்து மரணமடைந்த முதியவரை அடையாளம் காண உதவுமாறு வவுனியா பொலிஸார் நேற்று கோரியுள்ளனர்.

வவுனியா ஏ9 வீதி, மூன்று முறிப்பு பகுதியில் கடந்த 13ஆம் திகதி வீதியில் பயணித்த முதியவர் ஒருவர் மயங்கி விழுந்துள்ளார். அவ்வீதியால் சென்றவர்கள் முதியவர் வீதியில் கிடப்பதை அவதானித்து அம்பியூலன்ஸுக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து, அல்விட்திற்கு அம்பியூலன்ஸ் முதியவரை ஏற்றிக்கொண்டு வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டுசென்றபோதும், வைத்தியசாலைக்கு செல்வதற்கு முன்னரே அவர் மரணமடைந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த முதியவரின் சடலம் வவுனியா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், அவரை அடையாளம் காண உதவுமாறு வவுனியா பொலிஸார் பொதுமக்களின் உதவியைக் கோரியுள்ளனர்.

இந்த முதியவர் 70 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன், ஐந்தரை அடி உயரமுடையவர். தாடியுடன் உள்ள இவர் கறுப்பு மற்றும் மஞ்சள் நிறம் கலந்த சேர்ட்டும், நீல சாரமும் அணிந்துள்ளார். தனது இரண்டு கைகளிலும் பச்சை குத்தியுள்ளதுடன், இடது கையில் பிள்ளையார் உருவமும், வலது கையில் நாகப்பாம்பு உருவமும் குத்தியுள்ளார். இவர் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் வவுனியா சிறுகுற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி அல்லது வவுனியா பொலிஸ் நிலையத்தில் தகவல் வழங்குமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

சீரற்ற காலநிலை காரணமாக விவசாயிகள் பாதிப்பு



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் தொடர்ச்சியாக மழையுடன் கூடிய காலநிலை நிலவி வருகின்ற நிலையில், விவசாய செய்கையில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். மழை காரணமாக அறுவடைக்குத் தயாராான நிலையில் காணப்பட்ட நெற்செய்கைகள் சரிந்துள்ளதுடன், வயல் நிலங்களுக்குள் நீரும் அதிகளவு தேங்கியுள்ளது.

அதேநேரம் அறுவடையின் பின்னர் வீதிகளில் உலர விடப்பட்டிருந்த பல தொன் நெல் முற்றுமுழுதாக மழையில் நனைந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

முன்னதாகவே பசளை, உரம், எரிபொருள் விலை என அனைத்தினதும் விலையேற்றத்தின் மத்தியிலும் விவசாய செய்கையை மேற்கொண்ட விவசாயிகளிடம் நெல் மிகவும் அடிமாட்டு விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டுவரும் நிலையில் சீரற்ற காலநிலை காரணமாக மன்னார், கிளிநொச்சி மாவட்ட ஏழை விவசாயிகள் மேலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் – சைக்கிள் வழங்கிவைப்பு

(வவுனியா நிருபர்)

இலண்டன் என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் நீம் நிறுவன அனுரணையில் வடக்கு கிழக்கு பகுதிகளில் பல்வேறு சமூகப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு கட்டமாக நேற்று முன்தினம் (31) வவுனியாவில் 100 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நீம் நிறுவனத்தின் செயலாளர் ஓய்வுநிலை பீடாதிபதி கு.சிதம்பரநாதன் தலைமையில் வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், நீம் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் சைக்கிள்களும் வழங்கப்பட்டன.

அத்தோடு கபொத. உயர்தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் தெரிவாகிய மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், ஊக்குவிப்புத் தொகையும் வழங்கப்பட்டது.

இதேவேளை, இந் நிகழ்வில் கலந்துகொண்ட நீம் நிறுவனத் தலைவர் நிதர்சன் உட்பட பல அதிதிகள் கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சாந்தநிதி கலந்து சிறப்பித்ததுடன், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள் மற்றும் நிறுவனத்தின் உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கல்வியங்காட்டில் கடைக்குள் புகுந்து அடாவடி-கொள்ளை: மூவர் கைது!

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியிலுள்ள கடை ஒன்றினுள் வாள்களுடன் புகுந்து அடாவடியில் ஈடுபட்டுவிட்டு 5 இலட்சம் ரூபா பெறுமதியான பணம் மற்றும் பொருட்களை கொள்ளையிட்டு தப்பித்த கும்பலைச் சேர்ந்த மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் ஜனவரி மாத நடுப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

கோப்பாய் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் லக்சாந் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். முன்பகை காரணமாக இந்த அடாவடி மற்றும் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதென பொலிஸார் தெரிவித்தனர்.

மஸ்கெலியா சாமிமலை தோட்ட குடியிருப்பில் திடீரென தீப் பரவல்

(மஸ்கெலியா செய்தியாளர்)

ஆர்.பி.கே.பிளான்டேசனுக்கு உரித்தான மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள சாமிமலை ஸ்ரஸ்ப்பி தோட்ட குறி பிரிவில் நேற்றுக் காலை 9 மணிக்கு 24 மனைகள் கொண்ட தொடர் குடியிருப்புப் பகுதியில் 6 இலக்க குடியிருப்பில் தீப் பரவியது.

இதனைக் கண்ட ஏனைய குடியிருப்பாளர்கள் தொடர்ந்து தீப் பரவாமல் தடுத்தனர். இதில் பாலசுப்பிரமணியம் என்பவரது இல்லம் முற்றாக எரிந்துள்ளது. இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பத்தாருக்கு தோட்ட நிர்வாகம் தற்காலிகமாக இல்லம் ஒன்றை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

ஏழு அங்கத்தினர் உள்ள அந்தக் குடும்பத்தில் 4 பெரியவர்கள் 2 பாடசாலை மாணவர்கள் ஒரு குழந்தை ஆகியோர் உள்ளனர்.

தீப் பரவிய நேரம் சிறுவர்கள் மட்டும் இல்லத்தில் இருந்துள்ள நிலையில், ஏனையோர் பணிக்குச் சென்றிருந்ததாக அயலவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஹப்புத்தளை ஆரம்ப தமிழ் வித்தியாலய மாணவர்கள் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர். வி.நிலக்ஷன் (153), ஜே.பவன் (149), கே.ஓவியா (143), எல்.யதுர்சிகா (154), டி.மிதுர்சன் (144), எஸ்.சந்தோஷ் (163) ஆகிய மாணவர்களையும் வகுப்பாசிரியை ஜே.சாமிளா, அதிபர் எஸ்.ராஜமோகன் ஆகியோரையும் படத்தில் காணலாம். (பதுளை செய்தியாளர்)

தெஹிதெனிய பாடசாலைக்கு புதிய வகுப்பறைகள் அன்பளிப்பு

(உக்குவளை செய்தியாளர்)

உக்குவளை பௌத்த பிரதான சங்கநாயக்க பஞ்ஞாரத்த தேரரின் வேண்டுதலில் உக்குவளை வர்த்தகப் பிரமுகர்களான ஏ.எம்.சலீமின் ஆலோசனைப்படி, சீ.எம். உல்மான் மற்றும் நலன்விரும்பிகள் ஆகியோரது பங்களிப்புடன் கிடைத்த கூரார் பத்து இலட்சம் ரூபா நிதியுதவிகளில் உக்குவளை தெஹிதெனிய ஆரம்ப பாடசாலைக்கு இரண்டு வகுப்பறைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இதன்போது சங்கநாயக்க தேரர் மற்றும் மாத்தளை வலயக் கல்வி அதிகாரி எப்.ஜயசூரிய உட்பட வர்த்தகப் பிரமுகர்களும் கலந்துகொண்டனர். ஏற்கனவே இப்பாடசாலைக்கு குறிப்பிட்ட நலன்விரும்பிகளால் ஒரு இலட்சம் ரூபா செலவில் வாத்தியக்கருவிகளும் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இளைஞறுவை வளர்க்கும் வகையில் அமைந்த இப்பணியில் சம்பந்தப்பட்ட பிரமுகர்களுக்கு பௌத்த சங்கநாயக்கர் இதன்போது நன்றி தெரிவித்தார்.

மலையக மக்களுக்கான பாகுபாட்டை நீக்குங்கள்

கிறிஸ்தவ சபையினர் கோரிக்கை

மலையக மக்கள் நாட்டிற்கு வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு இலங்கை திருச்சபை, மெதடிஸ்ட் திருச்சபை மற்றும் இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தினர் இணைந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

இலங்கை காலனித்துவ ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் வேளையில், மலையக மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு வகையான பாகுபாடுகளை அகற்றுமாறு இந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஆள்மையில் பல இன, பல மதங்களைக் கொண்ட இலங்கையின் சமமான குடிமக்களாக மலையக மக்களை மாற்ற முடியும் எனவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கை திருச்சபை, இலங்கை மெதடிஸ்ட் திருச்சபை, இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தினர் இந்த அறிக்கையில் கையொப்பமிட்டுள்ளனர்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமாரின் ஏற்பாட்டில் அசீஸா புவண்டேஷன் அனுசரணையில் பதுளையில் இடம்பெற்றது. (படப்பிடிப்பு: பதுளை செய்தியாளர்)

ஜனவரி மாதத்தின் 3 வாரங்களில் நாட்டில் ஆறாயிரத்து 200 டெங்கு நோயாளர்கள் பதிவு

2023 ஜனவரி மாதத்தின் முதல் மூன்று வாரங்களில் இலங்கையில் 6,000இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஆனால், இம்மாதத்தில் டெங்கு நோய் பரவல் குறையவாமேன அதிகாரிகள் தெரிவிக்கிறார்.

சுகாதார அதிகாரிகள் ஜனவரி 22ஆம் திகதிக்குள் 6,204 டெங்கு நோயாளர்களை அடையாளம் கண்டுள்ள நிலையில், கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் 5,793 நோயாளர்களே பதிவாகியிருந்தனர். எனினும், இவ்வருடம் டெங்கு நோய் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

தற்போது மழையுடனான காலப்பகுதி நிலவுவதால் மேலும் டெங்கு நோய் அதிகரிக்கக்கூடும் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரி ஒருவர் சர்வதேச ஊடகமொன்றுக்கு (Economy Next) தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பதிவான அனைத்து நோயாளர்களிலும் 46.3 சதவீதத்துக்கு அதிகமானவர்கள் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று அதிகார உத்தியோகபூர்வ அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

அக்குரல்ல, மட்டக்களப்பு, ஏறாவூர், திருகோணமலை, மாதுபே, பதுளை, எஹலியகொட, கேகாலை, கல்முனை வடக்கு மற்றும் ஆலையடிவேம்பு பிராந்திய சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட பகுதிகள் டெங்கு அபாயகரமான பிரதேசங்களாக ஜனவரி மூன்றாம் வாரத்தில் சுகாதார அதிகாரிகளால் இனங்காணப்பட்டுள்ளன.

டெங்கு நோயாளர்கள் அதிகமாக இனங்காணப்படும் மாகாணங்களில் மேல் மாகாணம் எப்போதும் முதலிடத்தில் உள்ளது. அதுமட்டுமல்லாமல், புத்தளம், யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் இந்த காலகட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். கண்டி மாவட்டத்திலும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்" என்றார்.

வழக்கமாக டெங்கு நோய் பரவல் டிசம்பரில் அதிகமாக இருக்கும், ஆனால், அவை பெப்ரவரியில் குறையும். இந்த ஆண்டும் இந்தச் சூழ்நிலையை எதிர்கொள்கிறோம். நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் டெங்கு பாதிப்பு அதிகமாக உள்ளது.

நாட்டின் பொருளாதார நிலைமை காரணமாக சுகாதார அமைச்சால் டீசல் மற்றும் டெங்கு நோய் தடுப்புக்கான மருந்துகள் (புகை விசிற) சரியாக வழங்கப்படுவதில்லையென பொது சுகாதாரப் பரிசோதகர்களின் முந்தைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த குறிப்ச் சட்டை நிராகரித்த தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் (NDCU) அதிகாரி, "தேவையான மருந்துகளைப் பெறுவதற்கு அரசாங்கம் போதுமான நிதியை வழங்கியுள்ளது. ஆனால், டெங்கு கொசுவில் அதிக எதிர்ப்புச் சக்தி உள்ளது. டெங்கு பாதிப்பு ஏற்பட்டாலோ அல்லது அதே பகுதியில் சில நோயாளிகள் பதிவாகி யிருந்தாலோ புகை விசிறுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. போதுமான அளவு இரசாயன கையிருப்பு இருந்தாலும் டெங்கு நுளம்புகளுக்கு அது பாதிப்பை ஏற்படுத்துவது குறைவு" - என்றார்.

25 ஆயிரம் மெட்ரிக் தொன் யூரியா உரத்தை கொள்வனவுசெய்ய ரூ. 10 பில்லியன் ஒதுக்கீடு

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

எதிர்வரும் 2023ஆம் ஆண்டு நெற்செய்கை மற்றும் சோளச் செய்கைக்காக யூரியா உரங்களை கொள்வனவுசெய்வதற்கு 10 பில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்ய விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர அமைச்சின் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இலங்கை உரக் கம்பனி மற்றும் வர்த்தக உர நிறுவனங்களுக்குச் சொந்தமான களஞ்சியசாலைகளில் 30 ஆயிரம் மெட்ரிக் தொன் யூரியா உரம் உள்ளதாகவும், மேலும் 25 ஆயிரம் மெற்றிக் தொன்களை கொள்வனவுசெய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள தாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

யூரியா உரங்களின் கையிருப்புக்கு மேலதிகமாக மேலும் 25 ஆயிரம் மெட்ரிக் தொன் யூரியாவை கொள்வனவு செய்வதற்கு இந்த 10 பில்லியன் ரூபாவை ஒதுக்க விவசாய அமைச்சர் தீர்மானித்துள்ளார்.

ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் யூரியா உரத்தை இருப்பு வைத்து, நெற்பயிர்ச்செய்கை, சோளப் பயிர்ச்செய்கை மற்றும் இதர பயிர்களுக்குத் தேவையான யூரியா உரத்தை பருவ காலத்தில் வழங்குவதே இதன் நோக்கமாகும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

கப்பித்தாவத்தை ஆலய மகா கும்பாபிஷேகம்

கொழும்பு, கப்பித்தாவத்தை அருள்மிகு ஸ்ரீ கருணாகடாட்சி அம்பாள் உடனுறை ஸ்ரீ கைலாசநாதர் சுவாமி தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 09 மணிமுதல் 10.30 மணிவரையிலான சுபநேரத்தில் இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் கும்பாபிஷேக கிரியைகள் கடந்த 28 ஆம் திகதி பிரதம குரு சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் தலைமையில் ஆரம்பமாயின. நேற்றும் இன்றும் எண்ணெய்க்காப்பு இடம்பெறுவதுடன் விசேட பூஜைகளும் நடத்தப்படுகின்றன.

வலம்புரி கவிதா வட்ட 84ஆவது கவியரங்கு

வலம்புரி கவிதா வட்டத்தின் 84ஆவது கவியரங்கு எதிர்வரும் ஞாயிறுக்கிழமை (05ஆம் திகதி) காலை 10.30 மணிக்கு கொழும்பு, பழைய நகர மண்டபத்தில் நடைபெறும்.

கட்டாரிலிருந்து விடுமுறையில் வந்திருக்கும் கவிஞர் மெய்யன் நடராஜ தலைமையில் கவியரங்கு இடம்பெறும்.

நான்கு நிமிடங்களுக்கு உட்பட்ட கவிதை பாட விரும்புவோர் - நஜ்முல் ஹுசைன் (தலைவர்) - 0741438447 அல்லது இளநெஞ்சன், முர்ஷிதீன் (செயலாளர்) 0777388149 அல்லது ஈழகணேஷ் (பொருளாளர்) 0717563646 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அரசியல் விவகார உப செயலாளர் நுலண்ட் இலங்கை வருகை

அமெரிக்க - இலங்கை உறவுகளின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு மாநில அரசியல் விவகாரங்களுக்கான துணை இராஜாங்க செயலாளர் விக்டோரியா நுலண்ட் நேற்று (01) காலை இங்கங்கை வந்தடைந்தார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், இராஜாங்க செயலாளர் நுலண்ட்டை வரவேற்றார்.

பொருளாதார செழிப்பை வளர்ப்பதற்கும், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், நல்வினைக்கத்தை மேம்படுத்துவதற்கும் இலங்கையின் தற்போதைய சீர்திருத்தங்களுக்கு அமெரிக்கா வழங்கிய ஆதரவை துணைச் செயலாளரின் விஜயம் எடுத்துக்காட்டுவதாக அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

நுலண்ட் தனது இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு கட்டாருக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்குளி வட்டார ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளர் எஸ்.ஸ்ரீதரன், மட்டக்குளியில் வருமானம் குறைந்த 500 குடும்பங்களுக்கு உணவுப்பொருட்கள் வழங்கினார்.

சீனுகலயில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(கெலும் குணதிலக்க)

ஹம்பகமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரம்பலகாமம் னெனுகலப் பகுதியில் நேற்று முன்தினம் (31) மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது 2,750 கிராம் உலர் கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் அப்பகுதியில் வசிக்கும் 42 வயதுடையவர் என்பதுடன், வீட்டுக்கு அருகில் கஞ்சாவை உலர்த்திக்கொண்டிருந்தபோது கைதுசெய்யப்பட்டார்.

இருவேறு பகுதிகளில் மூன்று கஞ்சா சேனைகள் முற்றுகை

மூவர் கைது

(கெலும் குணதிலக்க)

இந்திகொவெலெஸ்ஸ மற்றும் தம்பேஆர பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது மூன்று கஞ்சா சேனைகள் கண்டுபிடிக்கப்பட்டதுடன், மூன்று சந்தேகநபர்களை ஹம்பகமுவ பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்திகொவெலெஸ்ஸ பிரதேசத்தில் பயிரிடப்பட்டிருந்த இரண்டு கஞ்சா சேனைகளுடன் அதே பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் மற்றும் தம்பேஆர பிரதேசத்தில் பயிரிடப்பட்டிருந்த கஞ்சா சேனையுடன் பலாங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்திகொவெலெஸ்ஸ பிரதேசத்தில் சுமார் ஒன்றரை ஏக்கர் பரப்பளவில் செய்கை பண்ணப்பட்ட இரண்டு கஞ்சா சேனைகள் கண்டுபிடிக்கப்பட்டதுடன், ஏழு மற்றும் எட்டு அடி உயரம் வளர்ந்திருந்த சுமார் 7500 கஞ்சா செடிகள் மீட்கப்பட்டன.

தம்பேர பிரதேசத்தில் 30 பேர்ச்சஸில் 5 முதல் 6 அடி உயரம் வரை சுமார் 1500 கஞ்சா செடிகள் இருந்தன.

கஞ்சா செடிகள் அனைத்தும் வெட்டி அழிக்கப் பட்டுள்ளதுடன், சில கஞ்சா செடிகளை

நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்காக பொலிஸார் எடுத்துச்சென்றனர்.

சந்தேக நபர்களும் கஞ்சாவும் வெல்லவாய நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஹெரோயினுடன் நால்வர் கைது

(மொனராகலை நிருபர்)

மொனராகலை மற்றும் புத்தல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் (31) மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது ஹெரோயின் வைத்திருந்த நான்கு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மொனராகலை, வெலவத்தை மற்றும் றோயல் பாடசாலைக்கு அருகில் வசிக்கும் இருவர் தலா 280 மற்றும் 50 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த நிலையில், கைதுசெய்யப்பட்டுள்ளனர்,

மேலும் 20 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த அதே பகுதியைச் சேர்ந்த இருவர் புத்தல உனவடுன பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் ஹெரோயினுடன் மொனராகலை மற்றும் வெல்லவாய நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

Job Vacancies

Account Assistant

Company: Tech One Global
Email: *hr@techoneglobal.com*

Project Manager

Company: Code Lantic
Email: *hr@codelantic.com*

IT Administrator

Institution: Colombo Swimming Club
Email: *vacancies@colomboswimmingclub.org*

System Engineer

Company: V S Information Systems PVT Ltd
Address: No: 07, Suleiman Terrace Colombo 05.

Accounting and Finance Executive

Company: The Urban Spice Shop PVT Ltd
Email: *Email: careers@tussspices.com*

Manager- Retail Recoveries

Bank: Union Bank of Colombo PLC
Email: *jobs@unionb.com*

Technicians

Company: Growell Lanka PVT Ltd
Apply: Growell Lanka PVT Ltd, Level 02, Deanston House Building, No 01, Deanston Place, Colombo 03.
info@growelllanka.com

Graphic Designer

Company: Chariot Tours and Travels PVT Ltd.
Location: Kandy
Email: *careers@chariot.tours*

Deputy General Manager – Human Resources

Company: Sanasa Life Insurance Company PLC
Apply: Chief Executive Officer, Sanasa Life Insurance Company PLC, 340, 2/1, RA De Mel Mawatha, Colombo 03.

Service Co-ordinator
Company: Ideal Group
Email: *careers@idealgroup.lk*

Marketing Executive/Office Co-ordinator/ Graphic Designer

Company: Hammer Digital
Contact: 011 2883875/0777 756976

SPL 2023
STIRLING PREMIR LEAUGE

எதிர் வரும் 05.02.2023 திகதியன்று 2ஆவ தடவையாக நடைபெறவிருக்கும் உள்ளூர் அணிகள் மாத்திரம் பங்கு கொள்ளும் அணிக்கு 07 பேர் மாபெரும் மென்பந்து (கிரிகெட்) சுற்றுபோட்டி.

இடம் :- ஸ்டெலிங் பொது விளையாட்டு மைதானம்
நேரம் :- காலை 08.22A.M
திகதி :- 05.02.2023

நிபந்தனைகள்,
01. ஒருவர் ஒரு அணியில் மாத்திரமே பங்கு பற்றல் வேண்டும்.
02. முறையற்ற பந்துவீச் தடை..
03. நேர்தரமான உடை..
04. wt போல் (பந்து மட்டுமே).
05. உதிரி வீரர் பயன்படுத்துவது தடை..
06. காலையை பயிற்சிகளுக்கு ஏற்ப பந்து ஒவர் நிர்ணயிக்கப்படும்
07. போட்டிகள் அனைத்தும் leauge ஆட்டப்படுவதுடன் வெற்றி.
08. நடுவரின் தீர்ப்பு இறுதியாகும்.
09. போட்டிகள அனைத்தும் நடத்துனரின் வழிகாட்டலின் கீழ் நடைபெறும்.

3999/=

முதலாம் :- வெற்றிகிண்ணம் (பதக்கம்)
இரண்டாம் :- வெற்றிகிண்ணம்

சிறந்த பந்து வீச்சாளர்,சிறந்த துடுப்பாட்டாளருக்கும் மற்றும் வளர்ந்து வரும் வீரருக்கும் பரிகசுகள் வழங்கப்படும்

ஊடக அனுசரனை
ஏற்பாட்டாளர் :- ஜெகன் :0775340540
போட்டி ஏற்பாடு . ஸ்டான்லி யோசுந்த்

இணைய ஊடகம்
அச்சு ஊடகம்
முதல்தர பத்திரிகையாக வரும்.....
தமிழன் தமிழ் முரசு தமிழன் Arunam Bk

அம்பாறை மாவட்டத்தில் மழையுடனான காலநிலை: இயல்பு வாழ்க்கை பாதிப்பு!

(பெரியநீலாவணை செய்தியாளர்)

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் தொடர்ச்சியாக மழை பெய்துவருவதோடு குளிரான காலநிலை காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் பொத்துவில் தொடக்கம் பெரியநீலாவணை வரைக்குமான கரையோரப் பிரதேசங்களில் தொடர்ச்சியாக விட்டு விட்டு மழை பெய்து வருவதோடு, இப்பகுதியில் மாலை வேளையில் கடும் குளிரான காற்றும் வீசி வருகிறது. இதனால் இப்பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தக் காலநிலை மாற்றம் காரணமாக முதியோர் மற்றும் சிறுவர்கள் அதிகளவில் சிரமங்களை எதிர்நோக்குவதுடன், பலர் சுவாச நோய்க்கும் உள்ளாவதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, மழை காரணமாக நெல் அறுவடை பாதிக்கப்பட்டு வருவதோடு, நாளாந்த கூலி வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஊடகர் நிபோஜனுக்கு மட்டக்களப்பில் அஞ்சலி!

(கல்லடி செய்தியாளர்)

கிளிநொச்சியைச் சேர்ந்த ஊடகவியலாளர் எஸ்.என்.நிபோஜனின் அகாலமரணத்தை யொட்டி, மட்டு. ஊடக அமையத்தில் நேற்று(01) அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இவ்வஞ்சலி நிகழ்வை மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு. ஊடக அமையம் மற்றும் கிழக்கு மாகாண தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

இதன்போது அகாலமரணமடைந்த ஊடகவியலாளர் எஸ்.என். நிபோஜனின் உருவப்படத்திற்கு ஊடகவியலாளர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தியதோடு, அகவணக்கமும் செலுத்தினர்.

இவ்வஞ்சலி நிகழ்வில், மாவட்டத்திலுள்ள பெரும்பாலான ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வட்டைமடு விவசாயிகளின் காணிப் பிரச்சினைக்கு எமது ஆட்சியில் நிரந்தரத் தீர்வுகள் வழங்கப்படும்

அக்கரைப்பற்றில் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

அக்கரைப்பற்று பிரதேச வட்டைமடு விவசாயிகளின் காணிப் பிரச்சினைகளுக்கு எமது ஆட்சியில் நிரந்தரத் தீர்வுகள் வழங்கப்படும் - என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அக்கரைப்பற்று மாநகர சபை மற்றும் அக்கரைப்பற்று பிரதேச சபையில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து அக்கரைப்பற்றில் நேற்று முன்தினம் (31) மாலை நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இப்பிரதேச விவசாயிகளின் வட்டைமடு காணிப் பிரச்சினை, நுரைச்சோலை வீடமைப்புத் திட்டம், கரும்புச் செய்கை மற்றும் விவசாயிகளின் யானைத் தாக்குதல் போன்ற பிரச்சினைகளுக்கு மலரப்போகும் எமது ஆட்சியில் நிரந்தரத் தீர்வுகள் வழங்கப்படும். அக்கரைப்பற்றிலுள்ள பொது மைதானம், திண்மக் கழிவுகள் நிறைந்த இடமாக காணப்படுகின்றது. இங்குள்ள திண்மக்கழிவுகளை அகற்றி சிறந்ததொரு பொது விளையாட்டு மைதானமாக அபிவிருத்தி செய்ய வேண்டும்.

அக்கரைப்பற்று மாநகர சபை மற்றும் பிரதேச சபையில் தனித்தே போட்டியிடுகின்றோம். தராசு சின்னம், மயில் சின்னம் உட்பட நாங்கள் எந்தக் கட்சி மற்றும் கூட்டணிகளுடனும் இணைந்து இங்கு தேர்தல் கேட்கவில்லை. இச்சின்னங்களுக்கு வாக்களிக்காது நமது ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைபேசி சின்னத்திற்கு மாத்திரம் வாக்களித்து அக்கரைப்பற்று மாநகர சபை மற்றும் பிரதேச சபையின் ஆட்சி அதிகாரத்தைப் பெற வாக்காளர்களாகிய நீங்கள் ஒத்துழைப்பு வழங்குங்கள் - என்றார்.

அக்கரைப்பற்று மாநகர சபையின் தொழில்நுட்ப கல்லூரி வட்டாரத்தில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சக்தியின் திகாமடுல்ல தேர்தல் மாவட்ட அமைப்பாளர் எம்.ஐ.ஏ.ஆர்.புஹாரி தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்

eastthamilan@gmail.com

அபராதம்

(கோணாவத்தை செய்தியாளர்)

திருக்கோவில் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட விநாயகபுர பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி பியர் விற்பனையில் ஈடுபட்ட நபருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரமின்றி 625 மில்லி லீற்றர் நிறையுடைய பியரை 600 ரூபாவிற்கு அனுமதிப்பத்திரமின்றி விற்பனை செய்தமைக்காக சந்தேக நபர் திருக்கோவில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (01) ஆஜர் செய்தபோது நீதவானால் 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

தென்னிலங்கை கட்சிகளின் ஆதரவு இல்லாமல் வடக்கு, கிழக்கு சபைகளைக் கைப்பற்றுவோம்

மட்டு. முன்னாள் எம்.பி. ஸ்ரீநேசன் நம்பிக்கை

(வெல்லாவெளி செய்தியாளர்)

இலங்கை தமிழரசுக் கட்சி அதன் பங்காளிக் கட்சிகளுடன் இணைந்து தென்னிலங்கைக் கட்சிகளின் ஆதரவு இல்லாமல் வடக்கு, கிழக்கில் உள்ள பெரும்பாலான சபைகளைக் கைப்பற்றும் என்றும் அதன்போது தமிழரசுக் கட்சி வகுத்த திட்டம் சரியானது எனும் உண்மை வெளிப்படும் என்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் (31) நடைபெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு தொகுதிக்கான வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நாட்டு மக்களுக்கு மின்சாரம், எரிபொருள், மருந்துப் பொருட்கள் என அத்தியாவசியப் பொருட்களை தர முடியாத மொட்டுக் கட்சியின் இம்முறை தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காக கிழக்கில் படகு சின்னத்திலும், வடக்கில் வீணை சின்னத்திலும் போட்டியிடுவதாக பெசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஒரு ஏக்கரில் 20 மூடைகள் விளைந்தால் ஒரு மில்லியனாகலாம் என கடந்த வருடம் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருந்தார். ஆனால், தற்போது இந்நாட்டில் குடிமகன் ஒருவருக்கான கடன் தொகை ஒரு மில்லியனாக அதிகரித்துள்ளது. அதாவது மறை கணியமாக அவரது கருத்துக்கு மாறாக இடம்பெற்றுள்ளது. கிழக்கை பாதுகாப்போம் என்று ஆட்சிக்கு வந்தவர்கள் மயிலத்தனமடு, மாதவனை, கெவிலியாமடு, நெடியகல் மலை என தமிழர்களின் பூர்வீக இடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டபோது வேடிக்கை பார்த்துக்கொண்டே இருந்தார்கள். இறுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்த சட்ட நடவடிக்கையின் காரணமாகவே அவை பாதுகாக்கப்பட்டன.

நாட்டுமக்கள் இனியும் மொட்டுக் கட்சியை நாடமாட்டார்கள். மொட்டுக் கட்சியால் நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் வீழ்ந்துள்ளது. எனவே, வீட்டுச் சின்னத்திற்கு வாக்களித்து வீணாக்களின் ஆட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைப்போம் - என்றார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பாளர்கள் உள்ளிட்ட கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

உலக ஈர நிலங்கள் தின விழிப்புணர்வு நிகழ்வு

(மூதூர் செய்தியாளர்)

உலக ஈர நிலங்கள் தினத்தினை (Feb. 02) முன்னிட்டு ஈர நிலங்களின் முக்கியத்துவம் அதன் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வினை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கில் Green Forest Globe அமைப்பின் அனுசரணையில் திருகோணமலை கமைகள் மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது.

பாடசாலை அதிபர் நா.காளிராசா தலைமையில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்வில், வளவாளராக சூழலியலாளர் ம.சசிகரன், பிரதம அதிதியாக கே.ஊர்மிளா (அபிவிருத்தி உத்தியோகத்தர், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களம், திருகோணமலை), சிறப்பு விருந்தினராக டீ.மேரி லியூஜின் (தலைவர் Green Forest Glob) மற்றும் கழக உறுப்பினர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

புலமைப்பரிசில் சித்தி

கடந்தாண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் பெரிய நீலாவணை அக்பர் வித்தியாலய மாணவன் பைசால் அம்மார் 148 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் சுகாதார உதவியாளர் பைசால் – பஸீலா தம்பதிகளின் புதல்வராவார்.

(மருதமுனை செய்தியாளர்)

காரைதீவுக்கு காத்திரமான சேவை வழங்க டக்ளஸ் காத்திருக்கிறார்

வேட்பாளர் விஜெயரெட்ணம் கூறுகின்றார்

(வெல்லாவெளி செய்தியாளர்)

காரைதீவு பிரதேச மக்களுக்கு காத்திரமான சேவைகளை வழங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காத்திருக்கின்றார். அவர் மக்கள் சேவையின் இலட்சணமாகும் - என்று உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் காரைதீவு பிரதேச சபைக்குப் போட்டியிடுகின்ற ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் எஸ். விஜெயரெட்ணம் (இராமர்) தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று(01) நடைகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்,

நான் சிறுவயது முதல் பொது சேவையில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வருபவன். மக்கள் சேவையே மகேசன் சேவை என்பது எனது தாரக மந்திரமாகும். கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் எனக்கு கணிசமான வாக்குகள் கிடைக்கப்பெற்றன. எனது அன்பர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கோரியமைக்கு அமையவே மீண்டும் தேர்தலில் போட்டியிடுகின்றேன்.

கல்வித் தெய்வமாகிய கலைமகளின் கைகளில் என்றும் வீணை இருக்கின்றது. தமிழர்களின் வீர கொடியாக வீணை விளங்கியது. நல்லதோர் வீணை செய்தே... என்று பாரதியார் பாடியுள்ளார். அவ்வாறான பெருமை வாய்ந்த வீணையின் சின்னத்தில் எமது மக்களின் ஆணையை கோரி வந்திருக்கின்றேன்.

கடந்த காலங்களிலும் அவர் எமது மக்களுக்கு ஆற்றியிருக்கின்ற சேவைகள் மறக்க முடியாதவை. காரைதீவு பிரதேச சபைக்கு முதன்முறையாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி போட்டியிடுகின்றது. எமது வேட்பாளர்களை வெற்றியடையச் செய்வதன் மூலம் எமது மண்ணும் மக்களும் வெற்றியடைய முடியும் - என்றார்.

சாய்ந்தமருது அல் - ஹிலால் பாடசாலையில் தரம் - 07 மாணவிகளால் முன்னெடுக்கப்பட்ட போசணைப் பொருட்கள் பற்றி விழிப்பூட்டும் கண்காட்சி "உணவும் போசணையும்" எனும் தொனிப்பொருளில் நேற்று (01) பாடசாலையில் இடம்பெற்றது. தரம்-07இன் பகுதித் தலைவர் திருமதி யூ.எல்.ஜெஸீமாவின் நெறிப்படுத்தலில் வகுப்பாசிரியரும் பாட ஆசிரியருமான திருமதி பீ.எம்.ஐ.சில்மியாவின் கண்காணிப்பில் முன்னெடுக்கப்பட்ட இக்கண்காட்சியினை அதிபர் யூ.எல்.நஸார் உட்பட பாடசாலையின் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களும் பார்வையிட்டனர். (படங்கள் எம்.எஸ்.எம்.ஸாகிர்)

மண்முனை தென்எருவில்பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்களினால் ஏற்பாடு செய்யப்பட் பொங்கல் விழா நேற்று முன்தினம்(31) பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சத்தியகௌரி தாணிதரன் ஆகியோரின் வழிகாட்டுதலில் பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது. இதன்போது பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் கிளை ரீதியாக 15 வகையான பொங்கல் பானைகள் வைக்கப்பட்டு பல்வேறு வகையான கலை நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன், கிளைகள் ரீதியாக இடம்பெற்ற போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற கிளைகளுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (எருவில் செய்தியாளர்)

விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த கஞ்சாப்பொதியுடன் இருவர் கைது

(அப்துல்சலாம் யாசிம்)

திருகோணமலை, மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரொட்டவெவ பகுதியில் கஞ்சா போதைப்பொருளை மறைத்து வைத்திருப்பதாக பொலிஸ் விசேட பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து, குறித்து வீட்டை சோதனையிட்டபோது விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த அரை கிலோ கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று (01) காலை இடம் பெற்றுள்ளது.

அத்தாபெந்திவெவ பகுதியைச் சேர்ந்த ரத்தரங் என்றழைக்கப்படும் சுனில் சாந்தகே ஹசேல பியசாந்த (28 வயது) என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, குறித்த சந்தேக நபருடன் அவரது வீட்டில் தங்கியிருந்த நாத்தான்டிய, இஹலமாவில பகுதியில் வசித்துவந்த தம்மிலகே தமித் பெரேரா (26 வயது) என்பவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த நபருக்கு ஏற்கனவே நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் கஞ்சா போதைப்பொருள் வியாபாரியுடன் வீட்டில் தங்கியிருந்ததாகவும் தெரிய வருகின்றது.

கைதுசெய்யப்பட்ட இரு சந்தேகநபர்களையும் விசாரணைகளின் பின்னர் திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவர் பராமரிப்பு ஆணையாளர் கிண்ணியா செயலகத்துக்கு விஜயம்

(சீனக்குடா செய்தியாளர்)

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைத் திணைக்களத்தின் தேசிய ஆணையாளர் மற்றும் யுனிசெப் அமைப்பின் இலங்கைக்கான இணைப்பாளர் ஆகியோர் நேற்று(01) கின்னியா பிரதேச செயலகத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது, சிறுவர் தொடர்பில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தொடர்பில் பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனியுடன் கலந்துரையாடினர்.

இதில் வெளிநாடு செல்லும் தாயின் பிள்ளைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், போதைப் பொருளுக்கு அடிமையாதல், கையடக்கத் தொலைபேசியால் ஏற்படும் சவால்கள் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் தொடர்பில் விரிவான விளக்கம் பிரதேச செயலாளரினால் முன்வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்டத்திலுள்ள அனைத்து சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களும் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தேர்தல் கடமைகள் தொடர்பில் தெளிவூட்டல் செயலமர்வு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ள உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான (ARO) தெளிவூட்டல் செயலமர்வு மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலகருமான திருமதி கலாமதி பத்ராஜா தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (31) இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலரும், மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தெரிவத்தாட்சி அலுவலருமான எம்.வீ.எம்.சுபியானின் ஒழுங்குபடுத்தலின் கீழ் இடம்பெற்ற இந்நிகழ்வில், உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான தேர்தல் மார்ச் 09ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமைக்கு அமைவாக, தேர்தல் கடமைகளின்போது உதவி தெரிவத்தாட்சி அலுவலர்கள் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் பெப்ரவரி 23ஆம், 24ஆம் திகதிகளில் தபால் மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ளதனால் தபால் வாக்களிப்பு நிலையத்தில் மேற்கொள்ளவேண்டிய முன்னாயத்த வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன், இச்செயற்பாட்டின்போது உதவி தெரிவத்தாட்சி அலுவலகர்களுக்கு ஏற்பட்ட சந்தேகங்களுக்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வின்போது மேலதிக அரசாங்க அதிபர்களான திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், திருமதி நவரூபரஞ்சினி முகுந்தன் (காணி) மற்றும் பதவிநிலை அதிகாரிகள், முப்படை உயரதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், துறைசார் நிபுணர்கள் மற்றும் உயரதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

தேர்தல் நடத்த பணமில்லை என்பது வெட்கப்பட வேண்டிய செயலாகும்

ஐ.ம.சக்தியின் திகாமடுல்ல அமைப்பாளர் புகாரி தெரிவிப்பு

(கோணாவத்தை செய்தியாளர்)

ஆட்சியாளர்களை மக்கள் ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் இல்லை என்பதை அறிந்தவர்களே தேர்தலை நடத்தப் பணமில்லையென்று மக்களை மாறற்ற கதை கூறுகின்றனர். உலகில் இலங்கையைத் தவிர, வேறு எந்த நாடும் தேர்தலை நடத்தப் பணமில்லை என்று கூறியதில்லை. இது வெட்கப்பட வேண்டியதாகும் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் திகாமடுல்ல மாவட்ட அமைப்பாளர் எம்.ஐ.ஏ.ஆர்.புகாரி தெரிவித்தார்.

அக்கரைப்பற்றில் நேற்றுமுன்தினம் (30) நடைபெற்ற தேர்தல் விளக்கக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஊழல் அரசியல்வாதிகள் ஆட்சியிலிருந்து விலகும் வரை எந்த நாடும் எமக்கு உதவப் போவதுமில்லை. இந்நிலையில், உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுமானால் அதனை ஸ்தாப்பமாகப் பயன்படுத்தி மக்கள் தமது வாக்குகளால் இந்த ஆட்சியாளர்களை விரட்டியடிப்பதற்கான சமிக்ஞையை வெளிப்படுத்துவார்கள்.

நாட்டிலுள்ள பெரும்பான்மையான மக்களின் முடிவுகளோடு ஒத்ததாக அக்கரைப்பற்று மாநகர மற்றும் பிரதேச சபைத் தேர்தல்களில்

அக்கரைப்பற்று மக்களும் சிறந்த முடிவை எடுப்பதற்குத் தயாராக வேண்டும். தற்போதைய ஆட்சியாளர்களின் பங்குதாரர்களாக இருக்கின்ற சில்லறைக் கட்சியினரை ஆதரிப்பது தற்கொலைக்குச் சமமானதொரு முடிவாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையினால் தேர்தலை நடத்த முடியாத நிலையேற்பட்டுள்ளதாக ரணில் - ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் கூறுகின்றது. ஏன் இவ்வாறான நிலைமை ஏற்பட்டது என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்தாமல் வெறுமனே இதனைக் கூறிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை - என்றார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக

கைதுசெய்யப்பட்ட 65 பேருக்கு பிணை; ஒருவர் தொடர்ந்தும் விளக்கமறியலில்!

(கனகராசா சரவணன்)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட சஹ்ரானின் பயிற்சி முகாமில் பயற்சிபெற்ற மற்றும் அவருடன் தொடர்பை பேணி வந்தவர்களென சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட 65 பேரையும் மே 30ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறும் ஒருவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பிற்றர் போல் செவ்வாய்க்கிழமை (31) உத்தரவிட்டார்.

கடந்த 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் இவர்கள் அம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற

இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தின்பேரிலும் காத்தான்குடியைச் சேர்ந்தவர்கள், சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர் உட்பட 66 பேரை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களுக்கு எதிராக காத்தான்குடி பொலிஸார் வழக்கு தாக்கல் மேற்கொண்டனர். இவர்கள் அனைவரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இதில் சட்ட மா அதிபரின் ஆலோசனைக்கமைய வழக்கிலிருந்து 3 பேரை விடுவித்ததுடன், 63 பேரில் 62 பேரை கட்டம் கட்டமாக பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் குற்றம் சாட்டப்பட்ட 20பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது பிணையில் விடுவிக்கப்பட்டவர்கள் நீதிமன்றில் ஆஜராகிய நிலையில் அவர்களை அடுத்த வழக்கு தினமான மே 30ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறும் தொடர்ந்து ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

கிழக்கு செய்திகள்
easttthamilan@gmail.com

75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சூழல் நேய பசுமை வேலைத் திட்டம்

(மட்டக்களப்பு)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு "சூழல் நேய பசுமை வேலைத் திட்டம்" மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கடமையாற்றும் இளைஞர் சேவை உத்தியோகத்தர்களினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன்போது நிழல் தரும் மரக்கன்றுகள் இளைஞர் சேவை உத்தியோகத்தர்களுக்கு வழங்கும் நிகழ்வு கல்லடியில் உள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிமனையில் உதவி பணிப்பாளர் திருமதி ஜேசுதாசன் கலாராணி தலைமையில் செவ்வாய்க்கிழமை (31) இடம்பெற்றது.

75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஏறாவூர்ப்பற்று,செங்கலடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இளைஞர் சேவைகள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பெப்ரவரி 3ஆம் திகதி தொடக்கம் 9ஆம் திகதி வரை மயிலம்பாவெளி விபுலானந்தபுரம் கிராமத்தில் சூழல் நேய பசுமை வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் இயற்கை மொழி அமைப்பின் தலைவி காயத்திரி உதயகுமார் மற்றும் இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

போடியார் புலம்பல்!



தேர்தல் ஆணங்கள் வர்த்தமானி அறிவித்தலுக்காக அரச அச்சக கூட்டுத்தாபனத்தில குடுத்தாச்சாம் எண்டு தேர்தல் ஆணையகத்தின் தலைவர் சொல்லியிருக்காரு எலுவா? வேட்பு மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு பத்து நாளுக்கு புறகுதான் இது நடந்திருக்கு எண்டா எப்படி ஆம வேகத்தில தேர்தல் வேல நடக்கிது எண்டத பார்த்தால் எதிர்வரும் 8ஆம் திகதி நீதிமன்றம் சொல்லுற தீர்ப்ப பார்த்துதான் எலக்சன் நடக்குமா இல்லையா எண்டத அச்சொட்டா கூறலாம் என்ன நான் சொல்லுறது மெய் எலுவா..?

மட்டக்களப்பு, ஏறாவூர்ப்பற்று, செங்கலடி பிரதேச செயலகத்தின் தைப்பொங்கல் விழா கொடுவாமடு காளி கோயிலில் இடம்பெற்றது. ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கமைவாக உதவிப் பிரதேச செயலாளர் திருமதி நிநபா பிருந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுகளை படங்களில் காணலாம். (மட்டக்களப்பு)

இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்கும் தருணத்தில் சுதந்திர தினம் வேண்டாம்!

இலங்கை மக்கள் தேசிய கட்சியின் செயலாளர் விஸ்ணுகாந்தன்

(மண்முனை செய்தியாளர்)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்கின்றது. இந்நிலையில், 75ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டம் தேவைதானா என கேட்கவேண்டியிருக்கின்றது. மக்களின் குடும்ப வருமானம், பொருளாதார நிலை சரியானதொரு சூழ்நிலைக்கு வரும் வரை சுதந்திர தின விழா வேண்டாம் - என இலங்கை மக்கள் தேசியக் கட்சியின் செயலாளர் என்.விஸ்ணுகாந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் செவ்வாய்க்கிழமை (31) இரவு இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்ட சில சம்பவங்களால் இந்நாட்டின் பொருளாதார நிலை மிகவும் நெருக்கடியை சந்தித்துள்ளது. இந்த நெருக்கடிக்கு மத்தியில் 75ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்திற்கு செலவு செய்யப்போகின்ற

பணத்தை செலவு செய்வதற்கு பிற்பாடல்ல செலவு செய்வதற்கு முன்னர் அந்த பணத்தின் பெறுமதியை அரசாங்கம் திரும்பிப் பார்க்க வேண்டும். ஏன் என்றால் இந்த நாட்டில் கல்வி, சுகாதாரம், விவசாயம் போன்றவை பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. மக்கள் பெரும் பொருளாதாரப பின்னடைவை எதிர்நோக்கியுள்ளனர். இவ்வாறு இருக்கும் போது நாட்டில் தற்போது சுதந்திர தினக் கொண்டாட்டம் தேவைதானா என அனைத்து மக்களிடமும் எழும் கேள்வியாக இருக்கின்றது.

இவ்விடயம் பற்றி ஜனாதிபதியும் பிரதமரும் கூடி உடனடியாக நல்லதோர் தீர்மானம் எடுக்கவேண்டும். கடந்த காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பங்காளியாக இருந்தோம். பின்னர் பொதுஜன பெரமுன கட்சியின் பங்காளியாக இருந்தோம். இன்று இவர்களுக்கு ஆதரவு வழங்கமுடியாது. ஏன் என்றால் இவர்களுக்கு தினமும் ஆதரவு வழங்குவதாக இருந்தால் மக்களை பலிக்கவேண்டி வரும்.

இவர்களுடைய ஆதரவை தவிர்த்து நாங்களும் மக்களுடன் பயணிப்பதற்கு தீர்மானம் எடுத்துள்ளோம். இந்த நிலையில் மக்களின் நன்மை கருதி முற்று முழுதாக இந்த சுதந்திர தின கொண்டாட்ட நிகழ்வை நிராகரிக்கின்றோம். நாட்டில் பொருளாதார நிலை சரியானதொரு சூழ்நிலைக்கு வரும் வரைக்கும் சுதந்திர தின விழாவை மறந்து நாட்டை வளப்படுத்தி கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும் என தெரிவித்தார்.

உலக செய்திகள்

வானில் வர்ணஜாலம் நடத்திய ஸ்டார்லிங்'ஸ்

தென்மேற்கு பிரித்தானியாவில் டெவ்சஸ்பரி நகருக்கு மேலே ஆயிரக்கணக்கான ஸ்டார்லிங் பறவைகள் ஒன்றிணைந்து வானில் விதவிதமான வடிவில் பறந்தன.

குறிப்பிட்ட பகுதியில் தமக்கு அச்சுறுத்தல் உள்ளது எனத் தெரிந்ததும், ஸ்டார்லிங் பறவைகள் தங்களை தற்காத்துக்கொள்ள ஒரேநேரத்தில் வானில் எழுகின்றன என பறவை ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஸ்பெயின் தீவுப் பகுதிகளில் 3 படகுகளில் சிக்கித் தவித்த 171 அகதிகள் பத்திரமாக மீட்பு

ஸ்பெயினின் தீவுப் பகுதிகளில் 3 படகுகளில் சிக்கித் தவித்த 171 அகதிகள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.

கேனரி தீவிற்கு படகொன்றில் வந்த 55 பேரையும், ஃபூர்டெவென்ச்சுரா (Fuerteventura) தீவில் 2 படகுகளில் வந்த 116 பேரையும் ஸ்பெயின் கடலோர பாதுகாப்புப் படையினர் மீட்டனர்.

கடும் குளிரில் சிக்கியவர்களுக்கு செஞ்சிலுவை சங்கத்தினர் மருத்துவ உதவியளித்து தற்காலிக முகாம்களில் தங்கவைத்துள்ளனர்.

வடஆமெரிக்க நாடுகளிலிருந்து ஆபத்தான பயணம் மேற்கொண்டு அகதிகள் வருவதாகவும், ஜனவரி மாதத்தில் மட்டும் கனேரி தீவிற்கு 371 அகதிகள் வந்துள்ளதாகவும், 2022ஆம் ஆண்டில் 15,682 பேர் வந்துள்ளதாகவும் ஸ்பெயின் தெரிவித்துள்ளது.

ஜெயலலிதாவின் சொத்தில் எனக்கும் உரிமையுள்ளது

மைசூர் முதியவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு

மறைந்த முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் சொத்தில் தனக்கும் உரிமையுள்ளது எனக் கூறி, மைசூரைச் சேர்ந்த முதியவர், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

கர்நாடக மாநிலம், மைசூரைச் சேர்ந்த எள்.ஜி.வாகதேவன் (வயது 83) என்பவர் தாக்கல் செய்த மனுவில்,

"என் பெற்றோர் ஜெயராம் - ஜெயம்மா. இவர்களுக்கு நான் மட்டுமே வாரிசு. வேதவல்லியை இரண்டாவதாக என் தந்தை திருமணம் செய்தார். அவர்களுக்கு ஜெயகுமார், ஜெயலலிதா ஆகியோர் பிறந்தனர். அதனால், எனக்கு அவர்கள் இருவரும் சகோதர, சகோதரிகளாவர். கடந்த 1950இல் என் தந்தையிடம் ஜீவனாம்சம் கேட்டு மைசூர் நீதிமன்றத்தில் என் தாயார் வழக்கு தொடர்ந்தார். வழக்கு நிலுவையில் இருக்கும்போது என் தந்தை இறந்தார். வேதவல்லி மற்றும் அவரது வாரிசுகள் ஜெயகுமார், ஜெயலலிதா ஆகியோரை பிரதிவாதிகளாக சேர்த்திருந்தார். இந்த வழக்கு சமரசத்தில் முடிந்துவிட்டது.

ஜெயலலிதா இறப்புக்கு முன்னர் ஜெயகுமார் இறந்துவிட்டார். சகோதரர் என்ற முறையில், நான் நேரடி வாரிசு. எனவே, ஜெயலலிதாவின் சொத்துகளில் பாதியை நான் பெற உரிமையுள்ளது. தீபா, தீபக் தான் சட்டப்பூர்வ வாரிசு என்ற உயர் நீதிமன்ற உத்தரவை வாபஸ் பெற வேண்டும். தாமதமாக தாக்கல் செய்யும் இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்க வேண்டும் - என்றுள்ளது.

இவ்வழக்கின் ஆதார ஆவணங்களைப் பெறுவதற்காக உயர் நீதிமன்ற வளாகத்திலுள்ள மாஸ்டர் கோர்ட்டில் வழக்கு விசாரணைக்கு வந்தது. மனுவுக்கு பதிலளிக்க தீபா, தீபக் ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டு, விசாரணையை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்துள்ளார்.

பாக். பள்ளி குண்டுவெடிப்பு: இதுவரை 100 பேர் உயிரிழப்பு!

பாகிஸ்தான் பள்ளிவாசலில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 100ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, குண்டுவெடிப்பை நிகழ்த்தியதாகக் கருதப்படும் தற்கொலைப் படை தீவிரவாதியின் துண்டிக்கப்பட்ட தலையை மீட்டு அதிகாரிகள் தேற்றமுள்ளதெனக் மீட்டுள்ளனர். இந்தக் கொடூரத் தாக்குதலுக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் அந்தோனியோ குட்டேரஸ், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் பிளிங்கன் உள்ளிட்டோரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானின் பெஷாவரில் நகரிலுள்ள பள்ளிவாசலில் திங்கட்கிழமை மதியம் தொழுகை நடைபெற்றுகொண்டிருந்தபோது, முன்வரிசையிலிருந்த தெஹ்ரிக்-இ-தலிபான் அமைப்பின் தற்கொலைப் படை தீவிரவாதியொருவர் தனது உடலில் பொருத்தியிருந்த சக்தியாய்ந்த வெடிகுண்டை வெடிக்கச்செய்தார்.

குண்டுவெடிப்பில் பள்ளிவாசலின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்துள்ளது.

இச்சம்பவத்தில் இதுவரை 100 பேர் உயிரிழந்துள்ளதுடன், 225இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந் தோரில் பலரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடுமென அஞ்சப்படுகிறது.

கறுப்பின இளைஞன் படுகொலை: 7 பொலிஸார் பணி இடைநீக்கம்

அமெரிக்காவில் கறுப்பின இளைஞர் கொல்லப்பட்ட வழக்கில் 7 பொலிஸார் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதுடன், 3 தீயணைப்பு வீரர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளன. தாக்குதல் நடத்திய பொலிஸார் மீது கொலை வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் டென்னசி மாகாணத்தின் மெம்பிஸ் நகரில் கடந்த 7ஆம் திகதி பொறுப்பற்ற முறையில் வாகனம் ஓட்டியதாகக் கூறி டயர் நிக்கோல்ஸ் என்பவரை பொலிஸார் ஐவர் கடுமையாகத் தாக்கினர். முகத்தில் மிளகு ஸ்பிரே அடித்தனர். பதிகாயமடைந்த டயர் நிக்கோல்ஸ், தீயணைப்புப் படையினரின் உதவியுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். 10ஆம் திகதி நிக்கோல்ஸ் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்நிலையில், குறித்த தாக்குதலில் ஈடுபட்ட ஐந்து பொலிஸாரும் கைதுசெய்யப்பட்டனர்.

பொலிஸாரின் தாக்குதலைக் கண்டித்தும், நிக்கோலஸுக்கு நீதிவேண்டியும் மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்திய மெம்பிஸ் பொலிஸ் நிர்வாகம், இந்தத் தாக்குதலில் தொடர்புடைய 7 பொலிஸாரையும் பணி இடைநீக்கம் செய்துள்ளது. இவர்களில் 5 பேர் கறுப்பினத்தவர்கள். இவர்கள் மீது கொலை வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது. தாக்கப்பட்ட நிக்கோலஸின் உடல் நிலையை மதிப்பீடு செய்து போதிய மருத்துவ உதவிகளை வழங்காத காரணத்துக்காக தீயணைப்பு வீரர்கள் 3 பேர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுக்கட்டாக ஊழியர்களுக்கு போனஸ் வழங்கிய சீன நிறுவனம்

உலகின் முன்னணித் தொழில்நுட்ப நிறுவனங்கள் ஆட்குறைப்பில் ஈடுபட்டுள்ள நிலையில், சீனாவைச் சேர்ந்த நிறுவனமொன்று ஊழியர்களுக்கு கட்டுக்கட்டாக போனஸ் தொகையை வழங்கியுள்ளது.

ஹெனான் மாகாணத்தில் இயங்கி வரும் ஹெனன் மைன் நிறுவனத்தில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். கொரோனா மற்றும் உலக மந்தநிலை காரணமாக சீனாவும் பொருளாதார நெருக்கடியில் இருந்துவரும் வேளையில், ஹெனன் மைன் நிறுவனத்தின் மொத்த வருவாய் 9.16 பில்லியன் யுவானாக அதிகரித்திருக்கிறது. இதனால், அந்நிறுவனம் பணத்தை மலைபோல் குவித்து வைத்து ஊழியர்களுக்கு ஊக்கத்தொகையை கட்டுக்கட்டாக வழங்கியுள்ளது.

மீண்டும் தலைமைப் பயிற்சியாளராகும் ஹத்துருசிங்க

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக சந்திக ஹத்துருசிங்கவை மீண்டும் நியமிக்க பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.

முன்னதாக 2014 முதல் 2017 வரை பங்களாதேஷ் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக கடமையாற்றிய அவர், பின்னர் இலங்கை தேசிய அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக பதவி வகித்துள்ளார். பங்களாதேஷ் கிரிக்கெட் சபை சந்திக ஹத்துருசிங்கவின் நியமனம் குறித்து இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்காவிட்டாலும், பெப்ரவரி நடுப்பகுதியில் புதிய பயிற்சியாளர் பெயரிப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நியூ சவுத் வேல்ஸின் உதவிப் பயிற்றுவிப்பாளர் பதவியிலிருந்து சந்திக ஹத்துருசிங்க இராஜினாமா செய்துள்ளதாக கிரிக்கெட் கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது. பங்களாதேஷ் கிரிக்கெட் அணி சந்திக ஹத்துருசிங்கவின் கீழ் தெளிவான மாற்றத்தை சந்தித்ததுடன், இதன் காரணமாக ஹத்துருசிங்கவின் பயிற்சியாளர் மீது உலகின் கவனம் குவிந்தது.

லக்னோ ஆடுகள தயாரிப்பாளர் அதிரடி நீக்கம்

(ரமணி)

நியூசிலாந்து, இந்தியா ஆகியவற்றுக்கிடையே லக்னோவில் நடைபெற்ற 2ஆவது ரி20 போட்டியில் மோசமான பிட்சை தயார் செய்த சுரேந்தர் குமார் உடனடியாக பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

இந்தியா மற்றும் நியூசிலாந்து இடையேயான மூன்று போட்டிகள் கொண்ட ரி20 தொடரின் இரண்டாவது போட்டி லக்னோவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்தப் போட்டியானது லக்னோவில் உள்ள அடல் பிஹாரி வாஜ்பாய் ஏகானா கிரிக்கெட் ஸ்டேடியத்தில் நடைபெற்ற நிலையில், இரு அணிகளும் ஓட்டமெடுக்க கடுமையாகத் திணறின.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 99 ஓட்டங்கள் எடுத்தது. இந்திய அணிக்கு எதிராக ரி20யில் நியூசிலாந்து அணியின் குறைந்த ஸ்கோராக இது பதிவானது.

100 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி ஒரு பந்து மீதம் வைத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இரு அணிகளும் குறைந்தளவிலான ஓட்டங்கள் அடிக்க, லக்னோ பிட்சே காரணம் என்று கூறப்பட்டது. வீசப்பட்ட 39.5 ஓவர்களில் 30 ஓவர்கள் இருநாட்டு சுழற்பந்து வீச்சாளர்கள் மட்டுமே வீசியுள்ளனர். இந்தியாவைச் சேர்ந்த சுழற்பந்து வீச்சாளர்கள் 13 ஓவர்களையும், நியூசிலாந்தின் சுழற்பந்து வீச்சாளர்கள் 17 ஓவர்களையும் வீசினர். சர்வதேச ரி20 போட்டியில் சுழற்பந்து வீச்சாளர்கள் வீசிய அதிக ஓவர்கள் இதுவாகும்.

இந்நிலையில், இந்த மோசமான பிட்சை தயார்செய்த சுரேந்தர் குமார் உடனடியாக பதவி நீக்கம் செய்யப்பட்டார். அவருக்குப் பதிலாக சஞ்சீவ் அகர்வால் நியமிக்கப்பட்டுள்ளார்.

போட்டிக்கு முன்பாக சுரேந்தர் குமார் இரண்டு கறுப்பு மண் ஆடுகளத்தை தயார் செய்திருந்ததாகவும், ஆனால், கடைசி நிமிடத்தில் சிவப்பு மண் ஆடுகளத்தை அமைக்குமாறு போட்டிக்கு மூன்று நாட்களுக்கு முன்பு அணி நிர்வாகம் கேட்டதாகவும் கூறப்படுகிறது. இதன் காரணமாகவே, போட்டியின் நாளன்று, போதுமான அளவிற்கு பிட்சை தயார்செய்ய முடியவில்லை என தகவல் தெரிவிக்கப்பட்டது.

ஐபிஎல் போட்டிகளாக இங்கு புதிய ஆடுகளம் தயாராகும் என்றும் கூறப்படுகிறது. இந்த மைதானம் லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸின் சொந்த மைதானம் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, குறைந்தது 7 ஐபிஎல் போட்டிகள் இங்கு விளையாட திட்டமிடப்பட்டுள்ளது. மகளிர் பிரீமியர் லீக்கின் லக்னோ உரிமையாளரின் சொந்த மைதானமாகவும் இது இருக்கப்போகிறது.

மீண்டும் முதலிட அரியணையில் ஏறிய ஜோகோவிச்

சர்வதேச டென்னிஸ் தரவரிசைப் பட்டியலில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில், ஆஸி. ஓபனை 10ஆவது முறையாக கைப்பற்றி பிரமிக்க வைத்த நோவக் ஜோகோவிச் (செர்பியா) 4 இடங்கள் முன்னேறி மொத்தம் 7,070 புள்ளிகளுடன் மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

ஏற்கனவே 374 வாரங்கள் முதலிடத்தில் இருந்துள்ள ஜோகோவிச், மறுபடியும் நம்பர் ஒன் அரியணையில் ஏறியுள்ளார். ஒட்டுமொத்த டென்னிசில் ஜேம்ஸி முன்னாள் வீரராங்கனை ஸ்டெபி கிராப் 377 வாரங்கள் முதலிடத்தில் இருந்ததே அதிகப்சமாகும். பெப்ரவரி 27ஆம் திகதிவரை 35 வயதான ஜோகோவிச் முதலிடத்தில் இருக்கும் பட்சத்தில் ஸ்டெபி கிராப்பின் சாதனையை தகர்த்து புதிய வரலாறு படைப்பார்.

இதுவரை முதலிடத்தில் இருந்த ஸ்பெயின் வீரர் கார்லஸ் அல்காரஸ் 2ஆவது இடத்துக்கு (6,730 புள்ளி) தள்ளப்பட்டார். மற்றொரு ஸ்பெயின் வீரர் ரபெல் நடால் 2இலிருந்து 4ஆவது இடத்துக்கு சறுக்கினார். ஆஸி. ஓபனில் ஜோகோவிச்சிடம் தோல்வியடைந்த கிரீஸ் வீரர் சிட்சிபாஸ் ஒரு இடம் உயர்ந்து 3ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

விடைபெறுகிறார் தடகளவீரர் மோ பரா



பிரிட்டிஷ் தடகள வீரர் மோ பரா இந்த ஆண்டு லண்டன் மரதன் தனது கடைசியாக இருக்குமாம் என்று கூறினார். 40 வயதான அவர், லண்டன் 2012, ரியோ 2016 ஒலிம்பிக் போட்டிகள் இரண்டிலும் 5,000, 10,000 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் இரண்டு, பல உலகப் பட்டங்களை வென்றவராவார்.

பரிஸில் 2024 ஒலிம்பிக்கில் போட்டியிடுவதை பரா நிராகரித்தார், ஆனால், இந்த ஆண்டு புடாபெஸ்டில் நடைபெறும் உலக சம்பியன்ஷிப்பில் பிரிட்டிஷ் சர்வதேச வீரராக தனது நேரத்தை முடிக்க முயற்சிக்கலாம்.

நான் ஒலிம்பிக்கிற்கு செல்லப் போவதில்லை, 2023 எனது கடைசி ஆண்டாக இருக்குமென நான் நினைக்கிறேன் என்று அவர் மேலும் கூறினார்.

ஆனால் அது இந்த ஆண்டின் இறுதியில் வந்து, உங்கள் நாட்டிற்காக நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால், நான் அதை ஒருபோதும் நிராகரிக்க மாட்டேன் - என்றார். பரா கடைசியாக 2019இல் லண்டனில் ஓடி, ஐந்தாவது இடத்தைப் பிடித்தார், அதற்கு முந்தைய ஆண்டு மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7